# DEPARTMENT OF EDUCATION.

## Secondary School-leaving Certificate Public Examination, 1918.

# TAMIL

# Poetical Selections (for Group A)

Published by order of the Director of Public Instruction, Madras.

MADRAS.

PRINTED AT THE S.P.C.K. PRESS, UNIVERSITY PRINTERS.

1917

# சூசிபத்திரம்.


| | | பக்கம். |
|---|---|---|
| I. | கல்விச்சிறப்பு .... .... .... .... .... <br> பாண்டியன் நெடுஞ்செழியன். | 5 |
| II. | திருக்கண்ணப்பதேவர் திருமறம்.. .... .... <br> கல்லாடதேவநாயனார். | 6 |
| III. | காயச்சிறைக்கலம் .... .... .... .... <br> பட்டினத்துப்பிள்ளையார். | 8 |
| IV. | திருஞானசம்பந்தர் .... .... .... .... <br> நம்பியாண்டார் நம்பி. | 9 |
| V. | இரசவாதம் .... .... .... .... .... <br> கச்சியப்ப சிவாசாரியார். | 10 |
| VI. | திரௌபதி மாலையீடு .... .... .... .... <br> வில்லிபுத்தூரர். | 15. |
| VII. | வீமதுச்சாதனர் யுத்தம் .... .... .... .... <br> வில்லிபுத்தூரர். | 26 |
| VIII. | திருவாசகத்தின் சிறப்பு.... .... .... .... <br> சிவப்பிரகாசர். | 29 |
| | குறிப்புரை .... .... .... .... .... | 30 |
| | அரும்பதவகராதி .... .... ---- ---- | 45 |

# I. கல்விச்சிறப்பு.

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே;
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும்மனம் திரியும்;
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னு(து),* அவருள்
அறிவுடையோன் ஆ(று)* அரசும் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே.

பாண்டியன் நெடுஞ்செழியன்.

* 'என்னு(து) அவருள்,' 'ஆ(று) அரசும்' என்னும் பதங்கள் பொருள் தெரியும்படி பிரித்து அச்சிடப்பட்டுள்ளன. அவற்றைப் படிக்கும்போது 'என்னுதவருள்' என்றும், 'ஆறரசும்' என்றும் படித்துக்கொள்க. மேல் இவ்வாறு வருவனவற்றையும் இவ்வாறே கொள்க.

# 11. திருக்கண்ணப்பதேவர் திருமறம்.

பரிவின் தன்மை உருவுகொண் டனையவன்,
போழ்வார் போர்த்த தாழுகச் செருப்பினன்,
குருதி புலராச் சுரிகை எஃகம்
அரையில் கட்டிய உடைத்தோல் கச்சையன்,
தோல்நெடும் பையில் குறுமயிர் திணித்து
வாரின் வீக்கிய வரிக்கைக் கட்டியன்,
உழுவைக் கூன்உகிர் கேழல்வெண் மருப்பு
மாறுபடத் தொடுத்த மாலைஉத் தரியன்,
நீலப் பீலி நெற்றி சூழ்ந்த
கானக் குஞ்சிக் கவடி புல்லினன்,
முடுகு நாறு குடில யாக்கையன்,
வேங்கை வென்று வாகை சூடிய
சங்கரன் தன்இனத் தலைவன், ஓங்கிய
வில்லும் அம்பும் நல்லன தாங்கி,
ஏற்றுக் கல்வனம் காற்றினில் இயங்கிக்,
கணையில் வீழ்த்திக் கருமா அறுத்துக்
கோலின் ஏற்றிக் கொழுந்தீக் காய்ச்சி
நாவில் வைத்த நாட்போ னகமும்,
தன்தலைச் செருகிய தண்பளித் தாமமும்,
வாய்க் கலசத்து மஞ்சன நீரும்
கொண்டு, கானப் பேர்உறை கண்நுதல்
முடியிற் பூசை அடியால் நீக்கி,
நீங்காக் குணத்துக்
கோசரிக் கன்றவன் நேசம் காட்ட
முக்கண் அப்பனுக்(கு) ஒருகணில் உதிரம்
தக்கணத் திடை இழிதா, அக்கணம்

அழுது விழுந்து தொழுதெழுந்(து) அரற்றிப்
புனமருந் தாற்றப் போகா தென்று
தணைமருந் தென்று மலர்க்கண் அப்ப,
ஒழிந்தது. மற்றை ஒண்டிரு நயனம்
பொழிந்த கண்ணீர்க் கலுழி பொங்க,
அற்ற(து) என்று மற்றக் கண்ணையும்
பகழித் தலையால் அகழ, ஆண்டகை
ஒரு கையாலும் இருகை பிடித்து
"ஒல்லை நம்புண் ஒழிந்தது; பாராய்!
நல்லை! நல்லை!" எனப்பெறும்
திருவேட் டுவர்தம் திருவடி கைதொழக்
கருவேட்(டு) உழல்வினைக் காரியம் கெடுமே.

கல்லாடதேவநாயனர்.

# III. காயச்சிறைக்கலம்.

அறிவில் ஒழுக்கமும் பிறிதுபடு பொய்யும்
கடும்பிணித் தொகையும் இடும்பை ஈட்டமும்
இனையன பலசரக் கேற்றி, வினையெனும்
தொன்மீ காமன் உய்ப்ப, அந்நிலைக்
கருவெனும் நெடுநகர் ஒருதுறை நீத்தத்துப்
புலனெனும் கோண்மீன் அலமந்து தொடரப்,
பிறப்பெனும் பெருங்கடல் உறப்புகுந்(து), அலைக்கும்
துயர்த்திரை உவட்டிற் பெயர்ப்பிடம் அயர்த்துக்,
குடும்ப மென்னும் நெடுங்கல் வீழ்த்து,
நிறையெனும் கூம்பு முரிந்து, குறையா
உணர்வெனும் நெடும்பாய் கீறிப், புணரும்
மாயப் பெயர்ப்படு காயச் சிறைக்கலம்
கலங்குபு கவிழா முன்னம், அலங்கல்
மதியுடன் அணிந்த பொதிஅவிழ் சடிலத்துப்
பைஅரா வணிந்த தெய்வ நாயக,
தொல்எயில் உடுத்த தில்லை காவல,
வம்பலர் தும்பை அம்பல வாண,நின்
அருளெனும் நலத்தார் பூட்டித்
திருவடி நெடுங்கரை சேர்த்துமா செய்யே.

பட்டினத்துப்பிள்ளையார்

# IV. திருஞானசம்பந்தர்.

ஆடுசினக் கடகரி யதுபட உரித்த
படர்சடைக் கடவுள்தன் திருவரு ளதனால்,
பிறந்தது
கழுமல மென்னும் கடிநக ரதுவே;
வளர்ந்தது
தேம்கமழ் வாவிச் சிலம்பரை யன்பெறு
பூங்குழல் மாதிடு போனகம் உண்டே;
பெற்றது
குழகனைப் பாடிக் கோலக் காப்புக்(கு)
அழகுடைச் செம்பொற் றாள மவையே;
தீர்த்தது
தாதமர் மருகல் சடையனைப் பாடிப்
பேதுறு பெண்ணின் கணவனை விடமே;
அடைத்தது
அரைசோ டிசையா அணிமறைக் காட்டுக்
குரைசேர் குடுமிக் கொழுமணிக் கதவே;
ஏறிற்று
அத்தியும் மாவும் தவிர அரத்துறை
முத்தின் சிவிகை முன்னாள் பெற்றே;
பாடிற்று
அருமறை ஓத்தூர் ஆண்பனை யதனைப்
பெருநிறம் எய்தும் பெண்பனை யாவே;
கொண்டது
பூவிடு மதுவில் பொறிவண் டுழலும்
ஆவடு துறையில் பொன்ஆ யிரமே;
கண்டது
உறியொடு பீலி ஒருகையில் கொள்ளும்
பறிதலைச் சமணைப் பல்கழு மிசையே;
நீத்தது
அவிழ்ச்சுவை யே அறிந்(து) அரனடி பரவும்
தமிழ்ச்சுவை அறியாத் தம்பங் களையே;
நினைந்தது
அள்ளல் பழனக் கொள்ளம் பூதூர்
இக்கரை ஓடம் அக்கரைச் செலவே;
மிக்கவர்
ஊன சம்பந்தம் அறுத்துயக் கொளவல
ஞான சம்பந்தன் இஞ் ஞாலத் திடையே.

நம்பியாண்டார் நம்பி

# V. இரசவாதம்.

1. மாவ தத்தினை இமைத்திடும் பூட்கையின் மதநீர்
காவ தத்தினுங் கமழ்தரு கலிங்கநாட் டகன்பால்
ஆவ தத்தநேர் மாக்கள்வாழ் அரிபுர மதனில்
தேவ தத்தனென் றுளனொரு வணிகரில் திலகன்.

2. தவத்தின் அன்னவன் பெறுமகன் தருமதத் தனெனப்
புவிக்கண் மேலவர் புகழ்செய அறம்புரி புகழோன்,
கவற்சி இன்றியே மூவகைப் பொருளையுங் காண்போன்
உவப்பு நீடிய இருநிதிக் கிறையினும் உயர்ந்தோன்.

3. தந்தை அன்னையும் இறத்தலுந் தமியனே யாகிச்
சிந்தை வெந்துயர் உழந்துபின் ஒருவகைதேற,
அந்த வேலையின் அவன்பெருந் திருவினை அகற்ற
வந்து தோன்றினன் மனமருள் செய்வதோர் வாதி.

4. முண்டி தப்படி சென்னியன், தாதுவின் முயங்கு
குண்ட லத்தினன், கோலநூன் மார்பினன், நீற்றுப்
புண்ட ரத்தியல் நெற்றியன், கஞ்சுகன், புதியோன்,
கண்டி கைக்கலன் புனைந்துளோன், வேத்திரக் காத்தோன்.

5. அவனைக் கண்டனன்; அடிமுறை வணங்கினன்; அருவாஞ்
சிவனைக் கண்டன னெனப் பெருமகிழ் சிறந்தான்;
“புவனிக் குள்ளவர் எண்ணினுஞ் சாலவும் புதியர்,
தவமிக் கோரிவர்” என்றுகொண் டுறையுளிற் சார்ந்தான்.

6. பொன்ன ருங்கலந் திருத்துபு, குய்யுடைப் புழுக்கல்
நன்ன லம்பெற அருத்தினன்; முகமனும் நவின்றான்;
பின்னர் அன்னவன் றனையெதிர் நோக்கினன் “பெரியோய்,
என்னி வண்வந்த(து)?” என்றனன் வணிகருக் கிறைவன்.

7. “ஈசன் தந்திடு விஞ்சையொன் றெமக்குள(து); எவர்க்கும்
பேசுந் தன்மைய தன்(று) அது; குரவர்பாற் பெரிதும்
நேசம் பூண்டவர்க் குரைப்பது; நெஞ்சினிற் சிறிதும்
மாசின் றுயநிற் குணர்த்துவம் அஃ(து)” என வகுத்தான்.

8. “சூத மேயிது; சம்புவின் வந்ததோர் தகைசால்
இரத முண்(டு), அது பொன்னெனச் செய்தனம்; எமக்கோர்
அரிது மன்(று);அது போல்வன பலவுள; அவைதாம்
விரத மாதவர் அல்லது யார்கொலோ விரும்பார்?

9. “காரி ரும்பையும் நாகத்திற் காட்டுதும்; கரிய
சீரி ரும்பினைப் பொன்னென உரைபெறச் செய்வாம்;
மேரு வுங்கயி லாயமும் என்றிரு வெற்பை
யாரும் நோக்கவே காட்டுதும்; இவைநமக் கரிதோ?

10. “எய்தும் ஈயமும் இரதமும் வெள்ளிய தெனவே
செய்தும்; அன்றியும் வங்கத்திற் செம்பொனுந் தெரிப்பாம்;
நொய்தி னன்னது வலியுறக் காட்டுதும்; நுவலும்
கைத வம்பயில் மாக்களுக் கினையன கழறும்.

11. “இரும்பி னிற்செம்பு வாங்குவம்; ஈயமும் அற்றே;
வரம்பி லாததோர் தரணியண் டங்களை மாயின்
அரும்பொன் வண்ணம தாக்குவம்; வல்லவா றுறைய
விரும்பி னுமெனின், யாண்டுமோர் அளப்பில வேண்டும்.

12. “ஒன்று கோடிபொன் ஆக்குவம்; கோடிய துளவேல்
குன்று போலவே கோடியிற் கோடிசெய் குவமால்;
நின்ற னக்குள பொருளெலாந் தருதியேல், நினது
மன்றன் மாளிகை நிதிக்கிடம் இல்லென வகுப்பாம்.”

13. என்ன வேமொழி சோரனை வணங்கினன், இமைப்பின்
முன்ன ருள்ளதும் தான்றன துரிமையான் முயலப்
பின்ன ரெய்திய நிதியமும் பேழையா னவற்றின்
மன்னு பூண்களும் கொணர்ந்தனன், முன்புற வைத்தான்.

14. வைத்த மாநிதி நோக்கலும் "வணிகரிற் றிலகர்
உய்த்த செல்வமு மிதுகொல்? ஓ!ஓ!" என உரையாக்,
கைத்த லங்கொடு கைத்தலம் புடைத்(து), உடுக் கணங்கள்
நத்த வேலையில் ஒருங்குபட் டாலென நகைத்தான்.

15. "இந்த நின்பொருள் நம்முடை விஞ்சையில் இறைக்கும்
வந்தி டாது;நாம் உருக்குறு முகந்தனில் வழுவிச்
சிந்து கின்றதற் கிலையிது; நமதுபின் திரியின்
அந்த மில்பொருள் கொடுக்குவம்; வைத்தி"என் றுறைந்தான்.

16. "முனியல்; ஐய, நீ வேண்டிய பெருநிதி முழுதும்
இனிது நாடியே கொணருவன்; இருத்தி"என் றுரைத்துப்
புனையும் ஆடையும் நிலங்களும் மணிகளும் பூணும்
மனையும் மாக்களும் பகர்ந்தனன், நிகரிலா வணிகன்.

17. பொருும தத்தினை இழைத்திடும் மருப்புயர் புழைக்கைப்
பெருும தக்கரி என்னவே மயங்கினன், பெரிதும்
வருும தத்தமென்(று)அறத்தையும் பகர்ந்து, மெய்வணிகன்,
தருும தத்தனும் பெயரினை நிறுவினன் தரைமேல்.

18. இத்தி றத்தினிற் றேடிய பெருநிதி எனைத்தும்
கைத்த லங்கொடு தாங்கியே கரவன்முன் காண
வைத்து நிற்றலும், மகிழ்ந்தனன், அவையெலாம் வாங்கி
மொய்த்த செங்கனல் தீயிடை உருக்குதன் முயன்றான்.

19. திரட்டி யாவையும் ஒருரு வாக்கினன், செழும்பொன்
இரட்டி தூக்கிய இரதமாங் கொருசிலை யிட்டு
மருட்டி, ஆடகம் முழுவதும் உரைத்(து),அவை வலிதா
உருட்டி,மட்பெருங் குகையினின் மருந்தைஉள் ளுறுத்தான்.

20. பண்ணு றுத்திய கனகமுள் ளிட்(டு),அதன் பாலும்
எண்ணு றுத்திய மிசைக்கணுங் களங்கமொன் றிட்டு
மண்ணு றுத்தி,நற் றுகில்கொடு பொதிந்தனன், மருங்கில்
கண்ணு றுத்திய செந்தழற் புடைமிசை கரந்தான்.

21. நூற்று நான்கொடு நான்குகுக் குடபுடம் நொய்தின்
வீற்று வீற்றதா விட்(டு)அது நோக்கினன் "மிகவும்
மாற்று வந்தது; பழுக்குமோர் வராகியில்; மருளேல்;
காற்றி லாததோர் உறையுள் காட்(டு)"என்றனன் கரவன்.

22. சேமஞ் செய்ததோர் உறையுளைக் காட்டலும், சென்று,
வாமஞ் செய்ததோர் இந்தனக் குவான்மிசை மறவோர்
ஈமஞ் செய்தசெந் தழற்கொடு வராகிமே விட்டுத்
தூமஞ் செய்தனன், அங்கியும் அவனெதிர் தூர்ந்தான்.

23. ஓங்கி நாட்டம்நீர் பொழிதர, ஆருயிர் உலைய,
வீங்கு கின்றமெய் வெதும்புற, எங்கணும் வியர்ப்ப,
மூங்கை யாமென மொழிகிலான், போவதும் முயலான்,
பாங்கி ருந்திடு வணிகர்கோன் பட்ட(து)ஆர் பகர்வார்?

24. எல்லை அன்னதில்,பொதிந்திடு பொற்குகை எடுத்து
மெல்லெ னத்தன தாடையிற் கரந்தனன் வெய்யோன்;
வல்லை அக்குகை போலவொன் றிருந்தது மருங்கில்
செல்ல வைத்தனன், தழற்பெரும் புகையையுந் தீர்த்தான்.

25. "தத்த, இக்குகை நின்கையிற் றுங்கினை தழன்மேல்
வைத்தி" என்றனன். அவனது புரிதலும், மாயின்
அத்த குஞ்செயற் குரியன யாவையும் அமைத்து
வித்த கம்பெறச் சேமியா, ஒருசெயல் விதித்தான்.

வேறு.

26. "உண்டி இகந்துரை யாடலை ஆகிப்,
பெண்டிரை வெஃகல் பெறாய்,பிறர் தம்மைக்
கண்டிட லின்று, கருத்தினில் எம்மைக்
கொண்டிரு முப்பகல், கோதில் குணத்தோய்.

27. நெய்கமழ் செஞ்சடை நீலிதன் முன்,ஓர்
மொய்கனல் வேள்வி முடித்திடல் உண்டால்,
செய்கடன் அன்னது தீர்த்தபின், நாலாம்
வைகலின் ஏகுதும் மற்றிவண்" என்றான்.

28. "அம்முறை செய்(கு)"என ஆங்கவன் அடியை
மும்முறை தாழ்ந்து முதற்பெரு வணிகச்
செம்மல் அவன்புடை சென்றிலன் நின்றான்;
மைம்மலி சிந்தையன் வல்லே அகன்றான்.

29. காவதம் ஓரொரு கன்னலி னாகப்,
போவது செய்து, புறத்துரு மாறி,
வாவினன், வேறோர் வளாகம துற்றான்.
ஏவலின் மைகினன், இத்தலை வணிகன்.

30. முப்பகல் போதலும், "முதறி வுள்ளோன்
செப்பிய நாள்வரை சென்றுள வன்றே?
இப்பகல் வந்திலன்! என்னை? அவன்சொல்
தப்புவ னோ?" என வேதனா கின்றான்.

31. நீடிய தொல்புகழ் நீலி பிருக்கை
நாடினன், மேதகு நன்னகர் எங்கும்
தேடினன், மாறுறு சிந்தையன் ஆனான்,
வாடினன், மீண்டனன், மாளிகை வந்தான்.

32. அடித்துமுன் வைத்த அருங்குகை தன்னை
எடுத்(து)அது நோக்க இரும்பது வாக;
வடித்தவிர் சிந்தையன் மாயைகொல் என்று,
விடுத்தனன், அன்னது வீழுமுன் வீழ்ந்தான்.

33. அத்த மனைத்தும் அகன்றிட லோடும்,
பித்தின் மனத்தொடு பிழையன் ஆகி
எய்த்தனன். ஆயுளின் எல்லையும் எய்தத்
தத்தனும் விண்ணிடை சார்ந்தனன் அன்றே.

கச்சியப்ப சிவாசாரியார்.

# VI. திரௌபதி மாலையிடு.

1. இங்கிவர் இவ்வா றிந்த இருக்கையில் இருக்கு நாளில்,
அங்கண்மா ஞால மெங்கும் அரக்குமா ளிகையின் வீந்தார்
பங்கமில் குணத்தான் மிக்க பாண்டவர் என்று மாழ்கத்
துங்கவேல் துருப தன்றான் சூழ்ந்தது சொல்ல லுற்றாம்.

2. வரத்தினாற் பிறந்த வாறும் வான்மொழி புகன்ற வாறும்
சிரத்தினால் வணங்கிக் கேட்பத் தேசிக னுரைத்த வாறும்
உரத்தினார் கெடாத வாறும் உணர்ந்துதன் பேதை இன்னம்
சரத்தினா லுயர்ந்த வின்மைத் தனஞ்சயற் குரியள் என்னா,

3. “தான்வரித் தவற்கே எய்த உரியள்என் தனயை” என்று
கான்வரிச் சுரும்புண் மாலைக் காவலர்க்(கு) ஓலை போக்க,
மான்வரிக் கண்ணிக் கேற்ற வதுவைநாள், மலர்பூ ஒன்றைத்
தேன்வரித் தென்ன, வந்து திரண்டது குமரர் சேனை.

4. ஆங்கது நிகழ்ந்த மாற்றம் அந்தணன் ஒருவன் வந்தோன்
ஈங்கிவர்க் குரைப்ப, மைந்த ரைவரும் யாயுங் கேட்டுப்
பாங்குடைப் பதியில் வாழும் பார்ப்பன மாக்க ளோடும்
தாங்கருங் கொடிய கானம் தம்மனத் தேறிற் போனார்.

5. சாரதந் திரத்தின் மிக்க தபோதனன், சதுர் வேதங்கள்
பாரதந் தன்னோ டைந்தாம் படியினாற் பகர்ந்த மூர்த்தி,
நாரத முனியை ஒப்பான், நராதிபர் நடந்து செல்லும்
நீரத நெறியில் வாவி நிறைந்தநீர் என்ன நின்றான்.

6. வணங்கலும் வாழ்த்தி “முந்த வந்துநீர் வாழ்வு செய்தீர்.
இணங்கிருங் கேண்மை கொள்வான்,இச்சையால் யாகசேனன்
அணங்கினை அன்று வேள்வி அழலிடை அளித்தான்: அந்தச்
சுணங்கணி மார்பாள் நாளைச் சூட்டுவள் தொடையல் மாதோ,

7. "இப்பகல் இரவும் வைகா தேகினுங் கெய்தும்; அங்கண்
அப்பகல் மன்றல் பெற்றால், தோற்றுதல் ஆண்மை" என்று
செப்பியே முனிவன் போகச், சிறுவரும் பெரிய கங்குல்,
மைப்புறப் பார்த்தன் செங்கை மணிவிளக் காரப் போனார்.

8. புத்திரன் பேரர் கங்கைப் பூந்துறை அடைந்த போதிற்
குத்திர விஞ்சை வேந்தன் குறுகிவெங் கொடும்போர் செய்யச்,
சித்திரத் தேரோன் தன்னைத் தேவர்கோன் மதலை, செந்தீ [மா!
அத்திரத்(து), இருந்தைத் தேரோ னாக்கினன் இமைப்பின் அம்

9. தோற்றவன் திரிந்து மீண்டு தோழன்அவ் விசயற் காக,
ஆற்றரும் புனலும் யாறும் அவன்றுணை யாக நீந்திச்,
சாற்றும்உற் கசநீ ரத்துத் தௌமிய முனியைக் கண்டு
போற்றி, மற்றவன்ற னோடும் புன்னெறிப் புறம்விட் டாரே.

10. புலர்ந்தன கங்குற் போதும் பொழிதரு பனியும்; சேர
மலர்ந்தன மனமுங் கண்ணும்; வயங்கின திசையும் பாரும்;
அலர்ந்தன தடமுங் காவும்; ஆர்த்தன புள்ளும் மாவும்;
கலந்தன குருகும் பேடும்; கலித்தன முரசுஞ் சங்கும்.

11. குன்றமுங் கொடிய கானுங் கூரிருட் கங்குல் நீங்கி
நன்றுநன் றுதவ வந்தீர்; நடந்துநீ ரிளைத்தீர் போலும்;
என்றுகொண் டுவகை யோடும் இன்மலர்க் கழுநீர் வாச
மன்றலந் தென்றல் வீசி வழிவிடாய் தணித்த தன்றே.

12. வெறிபடு முளரி மொக்குள் விரிபதன் நோக்கிச் சுற்றும்
பொறிவரி வண்டின் ஈட்டம் புறத்திருந் திரங்க, வண்டொன்று
இறகரால் வீசி உள்புக்(கு) இன்மது நுகர்தல் கண்டு
நெறியில்நல் நிமித்த மாக நெஞ்சுற நினைந்து சென்றார்.

13. வண்டுறை மருங்கின் ஆங்கோர் மாங்கனி வீழ்தல் கண்டே
தண்டுறை மீன்க ளெல்லாந் தத்தமக் கிரையென் றெய்த,
விண்டுறை கிழிய வோடி வென்றொரு வாளை தன்வாய்க்
கொண்டுறை வலிமை நோக்கிக் குறிப்பினால்உவகை கூர்ந்தார்.

14. "மாக்குரல் அளக வல்லி வதுவையின் அழகு காணத்
தாக்குரல் அடிகொள் யானைத் தரணிபர் எவரும் வந்தார்;
வீக்குநன் மிளிர்பொற் பூணீர், விரைவுடன் வம்மின்" என்று
கூக்குரல் விளிப்ப போலுங் கோகிலக் குரலுங் கேட்டார்.

15. நீடுத லில்லை; இன்றே நிருபதி கன்னி மன்றல்
கூடுதல் இவர்க்குண் டாகும்; கொற்றவர் குறைபொ ருதே
ஓடுத லுண்மை என்னுத் தோகைகள் ஓகை யோடும்
ஆடுதல் நோக்கி நோக்கி அகமகிழ்ந் தேகி னுரே.

16. பூவெலாஞ் சுரும்பு மொய்ப்பப், புனலெலாம் புள்ளூ வைக,
மாவெலாந் துணையின் மேவ, மரனெலாம் வல்லி புல்ல,
ஏவெலாம் பயின்ற விற்கை ஏற்றிளஞ் சிங்கம் போல்வார்
காவெலா மருங்கு தோறுங் கண்டுகண் களித்து நின்றார்.

17. வாரண மாயை சூழ்ந்த மாயவன் தோற்றம் போலப்
பேரொளி பம்பி யார்க்கும் பேசருஞ் சிறப்பிற் ருகிப்,
பூரண கும்பம் பொற்கோ புரங்களாற் பொலிந்து தோன்றும்
ஆரவ மிகுந்த பல்புள் அகழிசூழ் புரிசை கண்டார்.

18. மங்கல முழவம் விம்ம, மன்னுபல் லியங்கள் ஆர்ப்பச்,
சங்கினம் முழங்க, எல்லாத் தானையும் பரந்து சூழ,
எங்கணும் நெருங்கி வைகும் இராசமண் டலங்க ளோடும்
துங்கவேல் துருப தன்றன் தொல்லைமா நகரி புக்கார்.

19. தொடங்கியும், தொடக்கந் தொட்டுத் துகளற வளர்ந்தும், மீள
மடங்கியும் செல்லு கின்ற மன்னுயிர் உலக மெல்லாம்
முடங்கிய சார்ங்கச் செங்கை முகுந்தன்வாய்ப் புகுந்த காலத்
தடங்கிய உதரம் போன்ற தந்தமா நகரி அம்மா!

[வாய்

20. குழைப்புறங் கடந்த செங்கட் குறுநகைக் கொவ்வைச் செவ்
இழைப்பொலி ஆகத் தாளுக் கிற்றைநாள் வதுவை என்று,
மழைப்புற மாடம் ஏறி, வருநரை மலர்க்கை காட்டி
அழைப்பன போன்ற, வீதி அணிகொடி ஆடை யெல்லாம்.

21. விண்டலம் புதைத்த பைம்பொற் றுகிலிடு விதான நீழல்
மண்டகிற் புகையின் மூழ்கி, ஆவண மறுகிற் செல்வம்
கண்டுகண்(டு) அரியே(று) ஆனின் கவினுடை நெடுந்தோல்
[போர்த்துக்
கொண்டன செயலார் ஆங்கோர் குலாலன திருக்கை சேர்ந்தார்.

22. ஆங்கண்நற் றவத்தான் மிக்க அன்னையை இருத்தி, மைந்தர்
தாங்கள்முற் றுணையாய் வந்த தாபதர் தம்மோ டெய்தித்,
தூங்கணங் குரீஇயின் மஞ்சத் தலந்தொறுந் தூங்குகின்ற
தேங்கண்மாத் தெரியல் வேந்தர் சேர்ந்தபே ரவையி லானார்.

23. ஆதியிற் குந்தி மைந்த ரைவர்க்கும் உரிய ளாமென்(று)
ஓதிய விதியி னல்நெஞ் சுலப்புறு உவகை கூர்வாள்
சோதிடம் பொய்யா தென்றும் தோன்றுவர் உரியோர் என்றும்
தாதியர் தேற்றத் தேற்றத் தன்மனத் தளர்வு தீர்வாள்.

24. சூட்டிய தொடையன் மாலைத் தோழியர் வைகல் தோறும்
தீட்டிய படங்க ளும்தஞ் சிந்தையும் பொலிவு கொள்ளக்
கோட்டிய சிலையி னோடும் கொடிமணித் தேரி னோடும்
காட்டிய கோல மன்றிப் பிறிதொன்றுங் காண்கி லாதாள்.

25 "ஆண்டெரிப் பிறந்த போதே அன்பினு லெந்தை நேர்ந்த
பூண்டெரி மார்பன் இன்றிப் பொன்அவை பொலியத் தோன்றி
ஈண்டெரி முன்னர் மன்னர் இழிவுற வேட்டி லானேல்,
மீண்டெரி புகுவன்" என்னும் எண்ணமே விளையும் நீராள்.

26. கோண்பிறை நுதலா டன்னைக் கோதையர் பலருங் கூடித் [திப்
சேண்புனல் பலகொண் டாட்டிச், செழுந்துகி லெழுது சேர்த்
பூண்பன இசையப் பூட்டிப், புகைகமழ் தாமஞ் சூட்டிக்,
காண்பவர் ஆண்மை தேயக் காமரு கோலஞ் செய்தார்.

27. வந்தனர் குமரர் யாரும் வருகென மகிழ்ந்து போற்றிச்
சந்தணி மார்பி னளைத் தாயினும் பரிவு கூர்ந்தோர்
கந்தனும் உவமை ஆற்றுக் காவலர் காமத் தீயில்
இந்தனம் இடுவ தேய்ப்ப வேத்தவை ஏற்றி னாரே.

28. வெங்கழற் படைக்கை வேந்தர் விழிகளால் விளங்கு மேனிப்
பொங்கழற் பிறந்த பாவை பொற்பினைப் பொலிய நோக்கிப்
பைங்கழைத் தனுவோன் செங்கைப் பகழியாற் பாவ மெய்தி
அங்கழற் பட்ட நெய்போல் அனைவரும் உருகி னாரே.

29. மங்குலின் மங்குன் மூடி வயங்கொளி மறைந்து தோன்றாச்
செங்கதிர்ச் செல்வன் போலச் சீர்கெழு வடிவம் மாறி
அங்கவர் இருந்த தன்மை அறிந்ததோ? செறிந்த பொய்கைப்
பங்கயம் போன்ற தால்அப் பரிவுறு பாவை பார்வை.

30. மனக்கடுங் காதல் விம்ம, மாலைதாழ் புயங்கள் வாட,
எனக்கெனக் கென்றென்(று) ஏமாந் திருந்தகா வலரை நோக்கிச்
சினக்கடம் ஒழுகுங் கன்னக் களிற்றினான் திட்டத் துய்மன்
நினைக்கவும் அரிய தொன்றை நினைவினோ டுரைசெய் வானே.

31. "சிலையிது; சிலீமுகங்க ளிவை;கடுந் திரிகை வேகத்
திலைமுகத்(து) உழலு கின்ற எந்திரத் திகிரி நாப்பண்
நிலையிலா இலக்கும் அஃதே; நெஞ்சுற யாவன் எய்தான்?
கலைவலீர், அவற்கேஇந்தக் கன்னியும் உரியள்" என்றான்.

திட்டத்துய்மன்கூறிய இவ்வார்த்தையைக்கேட்ட அரசரெல்லாம் இடிமுழக்கங்கேட்ட பாம்புபோலக் கலங்கினாராயினும் திரௌபதியிடத்து வைத்த ஆசையினால் வெட்கமற்று அங்கேயிருந்தார்கள்.

### வேறு.

32. கண்போல் அம்பும் நுதல்போலுங்
கடுங்கார் முகமும் காண்டோறும்
திண்போர் வேந்தர் மனக்கலக்கஞ்
செப்புந் தகைத்தன் றானாலும்
விண்போ யுழன்று சுழல்இலக்கை
மெய்யே எய்து வீழ்த்திமலர்ப்
பெண்போல் வாளைக் கைப்பிடிக்கும்
போரா சையினால் பேதுற்றார்.

33. திருந்தார் மன்றற் குழலணங்கின்
செவிலித் தாயர் கடல்கடைந்து
வருந்தா அமுதம் நிகர்வாளை
மயில்போற் கொண்டு மன்னவைபுக்
கிருந்தார், இருந்த காவலரை
இன்னோர் இன்னோர் இவரென்று
முருந்தார் பவளத் துவரிதழ்வாய்
முகிழ்வாள் நகைக்கு மொழிகின்றார்.

34. மாற்றம் பிறிதொன்(று) உரையான்அவ்
வன்போர் வில்லின் வலிநோக்கிச்
சீற்றம் சிந்தை கொண்டழலப்
பொய்யே மலர்ந்த திருமுகத்தான்
ஏற்றம் தன்னில் வேறொருவர்
இப்பா ருலகில் இலரென்னத்
தோற்றம் படைத்தோன் தனைக்காட்டித்
துரியோ தனன்மற் றிவனென்றார்.

35. மணியின் கிரண வெயிலெறிப்ப
மண்ணேழ் தாங்கும் நச்செயிற்றுப்
பணியின் முடிநா யகத்தலையின்
பாங்கே நிரைத்த பன்றலைபோல்
துணியும் கொடுமை வகிரன்ன
துணைவர் துச்சா தனன்முதலோர்
அணியும் கழற்கால் சுயோதனனுக்
கருகா சனத்தர் இவரென்றார்.

36. "உலைவந் தயருஞ் சூன்மந்திக்(கு)
உருகா நிலங்கீண் டுதவுகுலக்
கலைவன் பலவின் சுளைகீறிக்
களிப்போ டளிக்குங் காந்தாரத்
தலைவன் சகுனி இவன்கண்டாய்
தக்கோர் ஆடாச் சூதுக்கும்
நிலைவஞ் சனைக்குந் தரணிபரில்
யாரே இவற்கு நிகர்"என்றார்.

37. "பேசா தொடுங்கும் பேரறிவால்
பெரும்போர் வலியால் பிறப்பால்மெய்த்
தேசால் இயற்றும் பலபடையால்
திண்டோள் வலியால் செஞ்சிலைக்கை
ஆசான் மைந்தன் இவன்றனக்கிங்
காரே உவமை? அமரிலும்
ஈசா னிணைமற் றொருசிறிதொப்
பெனலாம் அல்ல திலை" என்றார்.

38. "பெண்மைக் கிரதி யெனவந்த
பெண்ணா ரமுதே, பேருலகில்
உண்மைக் கிவனே; வலிக்கிவனே;
உறவுக் கிவனே; உரைக்கிவனே;
திண்மைக் கிவனே; நெறிக்கிவனே;
தேசுக் கிவனே; சிலைக்கிவனே
வண்மைக் கிவனே; கன்னனெனு
மன்னன், கண்டாய், மற்றிவனே.

39. "இந்தக் குரிசில், யதுகுலத்துக்
கெல்லாம் திலகம் எனுமாறு
வந்துற் பவித்துப், பொதுவருடன்
வளருங் கள்ள மாமாயன்;
முந்தக் கஞ்ச மாமனுயிர்
முடித்தான்; இவற்கு முகிலூர்தி
அந்தப் புரத்தில் ஆராமம்
அந்தப் புரத்துக் காராமம்.

40. "தண்ணந் துளவோன் தனக்கிளவல்
இவன்காண், மின்னே, சாத்தகியென்
றெண்ணும் போச குலத்தலைவன்,
எவரும் சூழ இருக்கின்றான்.
கண்ணன் றன்னை அவமதித்துக்
கழறும் புன்சொற் கார்முகத்தைத்
திண்ணென் கருத்தான் ஈங்கிவன்காண்
சேதிப் பெருமான் சிசுபாலன்.

41. "தார்வண் டிமிரத் தேனொழுகுந்
தடந்தோள் வீரன் சராசந்தன்,
போர்வெஞ் சரத்தால் யாவரையும்
புறங்கண் டன்றிப் போகாதான்;
சீர்வண் மதுரா புரிவிடுத்துத்
துவார கையினிற் சென்றொதுங்கக்
கார்வண் ணனையும் நெடுங்காலம்
வென்றான் இவன்காண்" என்றாரே.

42. "பனைக்கைப் பிறைவெண் கோட்டயிரா
வதமே போலும் பகட்டில்இவன்
வினைக்கட் புகுந்தால், எதிர்நின்று
வேறார் இவனை வெல்கிற்பார்?
முனைக்கட் செங்கண் தீயுமிழும்
முகத்தான் மாதே பகதத்தன்
தனக்குத் தானே நிகரென்னத்
தருக்கொ டண்டே இருக்கின்றான்.

43. "இவன்சல் லியனென் றுரைசான்ற
இகல்வேன் மன்னர்க் கேறனையான்
இவன்றன் பகைவர் யாவரையும்
இமையோ ராக்கும் எழில்நீலன்.
இவன்றண் தமிழ்தேர் அடல்வழுதி.
இவன்றேர் இரவி குலவளவன்.
இவன்செந் தழலோன் மாபாகி
ஈரே ழுலகும் புகழ்சேரன்.

44. "வில்லாண் மையினுல் வெங்கருப்பு
வில்லோன் றனக்கே நிகரென்னப்
பல்லார் புகழும் பான்மையினுல்
பதினெண் புவிக்கும் பதியாய
எல்லா அரசும் நின்பொருட்டால்
ஈண்டே திரண்ட, இன்னமுதச்
சொல்லாய், நல்லாய், மென்பூவாய்,
தோகாய், பாவாய், திரௌபதியே.

45. "இவரில் தனது தோள்வலியால்
அரியே றென்ன எழுந்திருந்(து)அத்
தவரில் புரிநா ணுறவேற்றித்,
தழல்கால் முனைவெஞ் சாயகத்தால்
பவரில் செறிஆர் நிரைத்துருளும்
பல்வாய்த் திகிரிப் பயில்இலக்கைக்
கவரிற், செழுந்தார் புனைந்(து)அவனை
கைக்கொண் டிடுநீ கடி(து)"என்றார்.

வேறு.

46. முத்தநகைப் பவளஇதழ்க் குளிர்வெண் திங்கண்
முகத்தாளைக் கைத்தாயர் மொழிந்த காலைச்,
சித்திரமொத் துணர்வழிந்து தத்தம் பைம்பொற்
றிகழரியா சனத்திருந்தார் சிற்சில் வேந்தர்;
அத்தனுவின் பெருமையையும் இலக்கத் துள்ள
அருமையையுங் கருதாமல் ஆண்மை கூறி,
எத்தனைஎத் தனைவேந்தர், ஆசை கூர,
யான்யானென் றெழுந்திருந்தார் யானை போல்வார்.

47. தனுவெடுத்து நாண்பிணிப்பான் கிளரா நின்ற
தன்குலத்தில் அவனிபரைத் தடுத்து, வேதப்
பனுவலுக்கும் தவத்தினுக்கும் உரிய வேள்விப்
பார்ப்பனமாக் களிணிடையே பாண்டு மைந்தர்
அனுவுருக்கொண் டுருமாறி இருந்த தன்மை
அறிந்தருளி, அலாயுதனோ டருளிச் செய்தான்
மனுமுறைக்கு வரம்பாகி வருத்தம் வீட
மாநிலமீ(து) அவதரித்த வாசு தேவன்.

48. பலருமுடன் அகங்கரித்து மேரு சார்அப்
பாரவரி சிலையின்நிலை பார்த்து மீண்டார்;
பலருமொரு கையிற்பிடிக்க அடங்கா வில்லின்
பருமைதனைக் குறித்துமனம் பதைக்கப் போனார்;
பலருமலர்க் கைப்படுத்திப் பெயர்க்க மாட்டார்
பணைத்தோள்நொந் தமையுமெனப் பயந்து நின்றார்;
பலருமெடுத் தணிமணிநாண் பூட்ட வாராப்
பரிசொடுமற் றதன்வலிமை பகர்ந்தே விட்டார்.

49. வல்லியம்போல் நடந்து,தனு இருகை யாலும்
வாரியெடுத் தெதிர்நிறுத்தி, மல்லல் வாருச்
சல்லியனும் நாணேற்ற முடியா தந்தத்
தனுவுடனே தன்றனுவுந் தகர வீழ்ந்தான்.
வில்லியரின் முன்னெண்ணத் தக்க வின்மை
வேந்தடுபோர்ச் சராசந்தன் வில்வே தத்திற்,
சொல்லியவா றெடுத்தூன்றி, மற்றைக் கையால்
தொல்வலிநா ணியுமெடுத்துத் தோளுஞ் சோர்ந்தான்.

50. பூகதனு கியஅன்றே பகைவ ரெல்லாம்
போற்றவளர்ந் துலகாளப் புனைந்த மௌலி
மாகதனும் வில்லெடுத்து வரிநாண் வில்லின்
மார்பளவும் போக்கினன்; வன்போர் நீலன்
சாகதனென் றவைதுதிக்க நெடுநாண் கொற்றத்
தனுவொருசா ணெனக்கொணர்ந்தான்; சாணே அல்ல
வேகதனு நால்விரலென் றுரைக்க நாணி
வீக்கினன் வலம்புரித்தார் வேந்தர் வேந்தே.

51. கலைவருத்தம் அறக்கற்ற கன்ன னென்னுங்
கழற்காளை, அரனிருந்த கயிலை யென்னு
மலை,வருத்தம் அற, எடுத்த நிருத னென்ன,
மன்னவையின் வலியுடனே வந்து தோன்றி,
நிலைவருத்தம் அறநின்று, பரிய கோல
நீள்வரிநாண் மயிர்க்கிடைக்கீழ் நின்ற தென்னச்,
சிலைவருத்தம் அறவளைத்து வளைந்த வண்ணச்
சிலைக்கால்தன் முடித்தலையைச் சிந்த வீழ்ந்தான்.

52. அரவநெடுங் கொடியுயர்த்தோன் முதலா வுள்ள
அனைவருமங் கொருதனுவுக் காற்று ராகி,
உரவுமெலிந் தெழின்மாழ்கிச் செயல்வே றின்றி
உள்ளமழிந் திருந்ததற்பின், உருமே றென்னக்,
கரவுடன்அந் தணர்நாப்பண் இருந்த கொற்றக்
கருமுகில்வா கனன்புதல்வன், கரிய மேனி
இரவிகுலச் சிறுவனைப்போ லெழுந்து, மன்றல்
இளங்கொடிதம் முனைநோக்கி, இயம்பி னனே.

53. "மன்மரபிற் பிறந்திருதோள் வலியால் இந்த
மண்ணுளும் அவர்க்கன்றி, மறைநூல் வாணர்,
தொன்மரபிற் பிறந்தவரும் இலக்கு வீழ்த்தாற்
சூட்டுமோ தொடையல்இளந் தோகை?" என்னத்,
தன்மரபுக் கணிதிலகம் ஆன வீரன்
"தகவன்றோ மன்றலுக்குத்? தாழ்வோ?" என்றான்.
வின்மரபிற் சிறந்தநெடு வில்லை ஈசன்
மேருகிரி எடுத்ததென விரைவிற் கொண்டான்.

54. கிளர்மகுட வயவேந்தர் நாண்க ளெல்லாங்
கீழாகத் தனிநெடுநாண் கிளர ஏற்றித்,
தளர்வறுசா யகந்தொடுத்துக், கற்றோர் யாரும்
தனுநூலுக் காசிரியன் றானே என்ன,
உளர்திகிரிச் சுழலிலக்கை அவையோர் தங்கள்
ஊக்கமுடன் விழவெய்தான் உரவுத் தோளான்.
வளருமருந் தவவேள்வி முனிவர் ஆர்த்தார்;
வாசநறு மலர்சொரிந்து வானோர் ஆர்த்தார்.

55. தாஞ்சாரற் கரியதனு வளைத்தா னென்று
தரணிபர்தம் முகங்கருகத், தனுவி னோடும்
பூஞ்சாரல் மணிநீல கிரிபோல் நின்ற
பூசுரனை, இவனவனே போன்மௌன் றெண்ணிப்,
பாஞ்சாலர் பதிகன்னி, இருதன் செங்கட்
பங்கயத்தாற், பாங்காகப் பரிந்து நோக்கித்,
தேஞ்சார நறுங்கழுநீர்ச் செய்ய தாமம
செம்மணிகால் அருவியெனச் சேர்த்தி னாளே.

56. அந்தரதுந் துபிமுழங்கச், சங்கம் ஆர்ப்ப,
ஆனகதுந் துபிமுதல்வன் ஆதி யாக
வந்திருந்த பேரவையை மதியா னாகி,
மாலையிடு பசுஞ்செம்பொன் மாலை யோடும்,
சந்திரனும் உரோகிணியும் என்ன, முன்னர்த்
தான்வளைத்த தடஞ்சிலைகைத் தலத்தில் ஏந்தி,
இந்திரகு னுவுமெழுந்தாங் கேக லுற்றான்
இருபுறமுந் துணைவர்வர இணையி லாதான்.

**வில்லிபுத்தூரார்.**

# VII. வீமதுச்சாதனர் யுத்தம்.

1. இருவரும் புயங்களின் அப்பி மொத்தினர்,
இகல்பு ரிந்துதண் டுறுகப் பிடித்தனர்,
மருவி ஒன்றொடொன் றனல்கக்க மொத்தினர்,
வலம்இ டம்கொள்மண் டலம்முற் பயிற்றினர்,
அருகு சென்றுசென் றடிதைத் தடித்தனர்,
அகல நின்றுநின் றெரிமைப்பின் முட்டினர்,
திருகு வெஞ்சினத் திடியொத் துரப்பினர்,
திசையின் மண்டிடப் கிரிசிந்தி யிட்டவே.

2. வெகுளி கொண்டுகொண் டெதிர்கொக் கரித்தனர்,
விசையுடன் கிளர்ந் துயரக் குதித்தனர்,
உகவை விஞ்சவெங் கதையைச் சுழற்றினர்,
உயர்வி சும்பெறிந் தொருகைப் பிடித்தனர்,
முகம்ம லர்ந்துநின் றதிரச் சிரித்தனர்,
முதிர வஞ்சினம் பலகட் டுரைத்தனர்,
மகிபர் கண்டகண் டவர்சித்தம் உட்கிட
வரைஇ ரண்டுவெஞ் சமர்கற்ப தொக்கவே.

3. இகலி வெங்கொடுங் கதைஒத்தும் ஒத்தொலி
இடியின் வெங்கொடுங் குரல்ஒத் தொலித்தன;
மகித லப்பிளந் தது;சர்ப்ப வர்க்கமும்
வயிறழன் றுநஞ் சுகள்கக்கி யிட்டன;
திகிரி யந்தடங் கிரிபக்கு நெக்கது;
செவிடு கொண்டயர்ந் ததுதிக் கயக்குலம்;
முகடு விண்டதண் டமும்அப் புறத்துற;
முகில்க ளும்பெருங் குகைபுக் கொளித்தவே.

4. விழிக ளும்சிவந் தன;நெற்றி யிற்பொறி
வெயர்வு வந்தரும் பின,இப்பி முத்தென;
மொழிக ளும்கிளம் பின,நெட் டிடிப்பென;
முரிமு ரிந்தவண் புருவச் சிலைத்துணை;
எழிலு டன்பரந் திறுகத் தடித்தன
இமய மந்தரங் களொடொத்த பொற்புயம்;
அழியும் அங்கம்என் றொருசற் றிளைத்திலர்
அமரில் அன்றருங் கதையிட் டடிக்கவே.

5. எதிர்ம லைந்தவெஞ் சமர்இப் படிக்கிவர்,
இரிதல் இன்றி,மொய்ம் புறஉத் தரிக்கவும்,
உதரம் நெஞ்சுரம் புயம்மெய்க் கழுத்தென
உரைசெய் அங்கம்ஒன் றினும்உற் றுறைத்தில;
கதைக ளும்பிளந் தொடிபட் டெடுத்தன;
கரத லங்களும் கருகிச் சிவந்தன;
முதிர்சி னம்கொளுந் தலின்முற் றும் விட்டிலர்
முரணு டன்தொடங் கினர்முட் டி யுத்தமே.

6. விரல்கள் ஐந்தையும் செறியக் குவித்(து),ஒளி
மிகுந கம்புதைந் திடஉட் புதைத்(து,)இரு
கரத லங்களும் சிகரப் பொருப்பிடை
கரிய கொண்டல்மண் டுருமொத் திடித்திட,
அருளு டன்சிறந் தறன்உற்ற கொற்றவன்
அநுச னும்தயங் குரகத் தனிக்கொடி
நிருபர் தம்பெருந் தகைமுற் கனிட்டனும்
நினைவு டன்கலந் தெதிர்குத்தி யிட்டபின்,

7. அனிலன் மைந்தன்என் றுரைபெற்ற கொற்றவன்
அரசன் முந்துதம் பியைமத் தகத்திடை
கனல்கொ ளுந்தமுந் ததிரத் தகர்த்(து)இரு
கவுள்நெ ரிந்துவண் செவிஉட் கரக்கவும்
முனைசி தைந்துரம் பெறுபல் தெறிக்கவும்
மொழிக ளும்தளர்ந் தனமுற் றொளிக்கவும்
மினலி னும்சிவந் தொளிமிக்க அற்புத
விழிபி துங்கவும் பெருகக் கலக்கியே,

8. பதயு கங்கள்அங் குலிதொட் டுறுப்புள
பலவும் என்புடன் தசைபற்று விட்டற,
விதவி தம்படும் புடைபட் டிடிப்புற
விசிர ரம்புசந் துகளில் தெறித்திட,
மதுகை யந்தடம் புயவெற் பறப்,பல
வரையு டன்பொருந் தியநற் கழுத்தற,
முதுகி லும்கவின் பெறஉற் பவித்தென
முகனை யும்புறம் திருகத் திருப்பியே,

9. மயிர்க ரங்கள்கொண் டிறுகப் பிடித்(து),எதிர்
வரவி ழுந்திடும் படிபற்றி யிட்(டு),உடல்
அயிர்ப டும்கடுந் தரையில் துகள்பட
அடியி ரண்டினும் சரியத் துகைத்(து),எழு
செயிரு டன்பெருந் தொடைதொட் டிழுத்(து),அணி
திகழ் உரம்புகுந்(து) அவுணக் குலத்திறை
உயிர்க வர்ந்தசிங் கமொடொப் புறத்,தன(து)
ஒளிசி றந்தனன் கடிதுக் கிரத்தோடே.

10. உகிர்எ னும்பெரும் பெயர்பெற்ற சொட்டைகள்
உருவி எங்கணும் புதைபட் டிரத்தலம்
வகிர வும்கொடுங் குடர்வட்டம் அற்றுகு
வயிறு தொங்கவும் கிழிவித்த பின்,செறி
துகிர்உ டைந்தசெம் பவர்ஒத்த நெட்டுடல்
சொரித ரும்பெருங் குருதிப் பெருக்கிடை
பகிர தன்தரும் கடவுள் துறைப்புனல்
படியும் உம்பர்தம் பரிசில் குளிக்கவே.

### வேறு.

11. மன்னற் கிளையோனை வாள்தரும னுக்கிளையோன்
துன்னப் பிளந்து சுரர்உலகம் ஏற்றுதலும்
கன்னற்கும் மற்றுள்ள காவலர்க்கும் நில்லாமல்,
வெந்திட்ட தம்மன்னன் வீரப் பெருஞ்சேனை,

# VIII. திருவாசகத்தின் சிறப்பு.

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரணன் உரையெனும் ஆரண மொழியோ?
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ?
யாதோ சிறந்த(து)? என்குவீ ராயின்,
வேதம் ஓதின், விழிநீர் பெருக்கி
நெஞ்சம் நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேம்;
திருவாசகம் இங்(கு) ஒருகால் ஓதின்,
கருங்கல் மனமும் கரைந்துகக், கண்கள்
தொடுமணற் கேணியின் சுரந்துநீர் பாய,
மெய்ம்மயிர் பொடிப்ப, விதிர்விதிர்ப் பெய்தி,
அன்பர் ஆகுநர் அன்றி,
மன்பதை உலகில், மற்றையர் இலரே.

சிவப்பிரகாசர்.

# குறிப்புரை.

## I. கல்விச்சிறப்பு.

(புறநானூறு—183.)

இப்பாட்டுப் புறநானூற்றிலுள்ளது. புறநானூறு என்னும் நூல் சங்கம் மருவிய நூலாகிய எட்டுத்தொகையுள் ஒன்று. அது புறத்திணைப் பொருளமைந்த நானூறு பாட்டுக்களாலாயது. புறத்திணையாவது அறமும் பொருளும் பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கம். புறம்—வெளி; திணை—ஒழுக்கம். உள்ளத்துணர்வாலேயே அறியப்படும் இன்பம்போலாது, இவை இத்தன்மையவென ஒருவரால் பிறர்க்குப் புலனாகக் கூறப்படுந் தகைமையவாதலின், அறமும் பொருளும் புறமெனப்பட்டன. தொகை தொகுக்கப்பட்ட நூல்; அஃதாவது, திரிகடுகம், நான்மணிக்கடிகை, திருக்குறள் என்பனபோல ஒருவரால் யாக்கப்படாது, பல ஆசிரியர் இயற்றிய கவிகள், பொருளாலாக, பாட்டாலாக, தொகுக்கப்பட்டது. பொருளால் தொகுக்கப்பட்டன அகநானூறு, புறநானூறு முதலியன; பாட்டால் தொகுக்கப்பட்டன பரிபாடல், கலித்தொகை முதலியன. புறநானூற்றைத் தொகுத்தவர் யாவரென்பது இப்போது தெரியவில்லை. கல்வியின் சிறப்புக்கூறும் இப்பாட்டைப் பாடினவன் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்பவன். "வடவாரியர் படைகடந்து, தென்றமிழ் நாடொருங்கு காணப், புரைதீர்கற்பிற் றேவி தன்னுடன், அரசுகட்டிலிற்றுஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியன்" எனச் சிலப்பதிகாரத்து மதுரைக்காண்டத்தின் இறுதிக் கட்டுரையிற் கூறப்படுபவன் இவனேபோலும். ஆயின் இவன் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டெனக். (M. Srinivasa Aiyangar's *Tamil Studies*—pages 388, 389.)

1. உற்றுழி—(தமது ஆசிரியனுக்கு ஒரு துன்பம்) உற்றவிடத்து.

2. பிற்றை நிலை—பின்னே நிற்றல்; வழிபட்டு நிற்றல். பின்றை, பிற்றை என்பன ஒருபொருட்கிளவி

3. ஓர் அன்ன—ஒரு தன்மையாகிய. உடன்வயிறு – (சகோதரம்) ஒரு வயிற்றுப்பிறந்தோர்.

4. சிறப்பின் பாலால்—கல்வி விசேடத்தால். 7. ஆறு—வழி.

8. நாற்பால்—நான்கு பகுதி, நாற்குலம்.; பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என்பன.

10. அவன்கண்படும்—அவனிடத்துச்சேர்வன்.

கல்வியாற் சிறந்தவனிடத்துத் தாயும் மனம் திரியும், அரசும் செல்லும், மேற்பால் ஒருவனும் படும்; ஆதலால் கற்றல் நன்று என்க.

## II. திருக்கண்ணப்பதேவர் திருமறம்.

இப்பாட்டுச் சைவத்திருமுறைகளுள் ஒன்றாகிய பதினொன்றாம் திருமுறையிலுள்ளது; கல்லாட தேவநாயனார் என்பவரால் பாடப்பட்டது. கண்ணப்பர் பெரியபுராணத்திற் கூறப்படும் சிவனடியார் அறுபத்துமூவருள் ஒருவர். இவருடைய அன்பின் மிகுதியாலுண்டாய அஞ்சாமைத் தன்மையைக் கூறுதலின், இச்செய்யுள் 'திருமறம்' எனப்பட்டது. மறம்—வீரம். இவருடைய சரித்திரத்தை ஆறுமுகநாவலரியற்றிய பெரியபுராண வசனத்திற் காண்க. கல்லாட தேவநாயனார் காலத்தைப்பற்றி Tamil Studies 409 and 411 பக்கங்களைப் பார்க்க.

1. பரிவின்தன்மை—அன்பு.

2. தாழகம் — தாளகம், எதுகைநோக்கி ளகரம், ழகரமாய்த் திரிந்தது; பாதத்தின்கண் என்பது பொருள். அகம்—ஏழாம் வேற்றுமை உருபு. தாளகச் செருப்பினன்—காலில் செருப்புடையவன்.

3. சுரிகை எஃகம்—உடைவாள்; இருபெயரொட்டு.

6. வரிக்கைக்கட்டியன்—வரிகளையுடைய கைக்கட்டியையுடையவன், கைக்கட்டி—கைக்கவசம்.

8. மாறுபட—மாறிமாறிவர.

10. கானக்குஞ்சி—காடுபோன்ற மயிர். "செடித்தெழுகுஞ்சி" என்பர் நக்கீரர்; கண்ணப்பர் திருமறம், 21. கவடி—பலகறை.

11. முடுகு—முடைநாற்றம். cf. "முடுகுநாறிய வடுகர்வாழ் முருகன் பூண்டி"—சுந். முருகன் பூண்டி, 1. குடிலம்—வளைவு. வேடர் மிருகங்களைப் பிடிக்கத் தமது உடலை ஒடுக்கி வளைந்து செல்வதற்குக் குடிலிகை என்று பெயர்.

12. வாகை—வாகைமாலை; வெற்றிமாலை.

15. ஏற்று—ஏற்றம், உயர்வு. cf. ஏற்றிழிவு. காற்றினில் இயங்கி—காற்றைப்போல வேகமாக நடந்து.

16. கருமா—பன்றி. 18. நாட்போனகம்—புத்தமுது.

19. பளித்தாமம்—பள்ளித்தாமம், சுவாமிக்குச் சாத்தும் பூ. பள்ளி—கோயில். பளி—இடைக்குறை.

21. கானப்பேர்—ஒரு சிவஸ்தலம். இது இராமநாதபுரம் ஜில்லாவில் சிவகங்கைக்குப் பத்துமைல் தூரத்தி லுள்ளது. இப்போது காளையார் கோயில் என வழங்குகின்றது. *

24. கோசரி – சிவகோசரி. காளத்திநாதருக்குப் பூசைசெய்துவந்த சிவப்பிராமணன்.

26. தக்கணம்—வலப்பக்கம்; தக்ஷிணம் என்னும் வடமொழிச் சிதைவு.

28. புனமருந்து—காட்டிலுள்ள மருந்து.

32. அற்றது—அற்று அது. அற்று—அத்தன்மைத்து.

33. பகழித்தலை—அம்புத்தலை, arrow-head.

36. நல்லை – முன்னிலை ஒருமை வினைமுற்று, நீ நல்லவன் என்பது பொருள். 37. திருவேட்டுவர்—கண்ணப்பர்.

38. கருவேட்டு உழல் வினைக்காரியம் – பிறவிக்குக் காரணமாயுள்ள வினைப்பயன். கரு—கருப்பம். வேட்டல்—விரும்பல். உழலல்—சுழலல்.

## III. காயச்சிறைக்கலம்.

(கோயினான்மணிமாலை–16.)

இப்பாட்டுப் பட்டினத்துப்பிள்ளையார் பாடிய கோயினான்மணிமாலையில் வருவது; பதினாறாஞ்செய்யுள். கோயில் நான்மணிமாலை கோயிலைப் புகழ்ந்து பாடிய நான்மணிமாலை. கோயில்—(கோ + இல்) அரசனுடைய வீடு; பின்னர்த் தேவாலயத்துக்காயிற்று. இங்கே சிதம்பரத்தை உணர்த்துகின்றது. இது தலைமைபற்றி வந்த பெயர். நான்மணிமாலை—நான்குமணிகள் கோத்த மாலை: வெண்பா, கலித்துறை, ஆசிரியவிருத்தம், ஆசிரியப்பாவாகிய நான்கு பாட்டுக்களால் செய்யப்பட்ட நூல். பட்டினத்துப்பிள்ளையார், அவருடைய பெயர் குறிக்கிறபடி, காவேரிப்பூம் பட்டினத்தில் இருந்தவர். அவர் துறவியாகிச் சென்னைக் கருகிலுள்ள திருவொற்றியூரில் சமாதியடைந்தனர் என்ப. அவரியற்றிய பிரபந்தங்கள் ஐந்து. இவ்வைந்தும் மேற்கூறிய பதினொன்றாந் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. அவர் பாடிய தனிப் பாடல்கள் பலவும் ஒன்றுசேர்க்கப்பட்டுப் பட்டணத்தார் பாடல் என்னும் பெயரால் வழங்கிவருகின்றன. மாணிக்கவாசகரையும் சிவவாக்கிய தேவரையும் வரகுணபாண்டியனையும் வியந்து பாடுதலின் பட்டினத்தார் அவர்களுக்குப் பிற்பட்டவராவர். நம்பி ஆண்டார் நம்பிக்கு முற்பட்டவர். காலம் பத்தாம் நூற்றாண்டென்ப.

காயச்சிறைக்கலம் உயிரைச் சிறைவைத்த காயமாகிய கலம் எனப் பொருள்படும். காயம்—உடம்பு. கலம்—கப்பல்.

இப்பாட்டில் உடம்போடுகூடி உலகில் உழலும் உயிரைப் பலசரக் கேற்றிப் பெருங்கடலிற் புகுந்து சுழலும் மரக்கலமாக உருவகித்திருத்தல் காண்க.

1. பிறிதுபடுபொய்—உண்மைக்குமாறாய பொய்.

3—4. வினை அநாதியாய் வருவதாகலின், அதனைத் தொன்மீகாமன் என்றார்.

5. கரு—கருப்பை. நீத்தம்—வெள்ளம்.

6. கோண்மீன்—சுறா. அலமருதல்—சுழலல்.

8. உவட்டு—பெருக்கு. பெயர்ப்பிடம்—பெயருமிடம், செல்லுமிடம்.

9. கல்—நங்கூரம், anchor. முற்காலத்தில் நங்கூரத்திற்காகப் பருங் கல்லைக் கட்டிப்போடுதல் வழக்கம்.

10. நிறை — காப்பனகாத்துக் கடிவனகடிந்து ஒழுகும் ஒழுக்கம். கூம்பு—பாய்மரம். 13. கலங்குபு—கலங்கி.

16. தில்லை—சிதம்பரம்; ஆதியில் தில்லைமரக் காடாயிருந்தமைபற்றி வந்த பெயர்.

17 வம்பு—வாசனை. தும்பை – ஒரு பூ. அம்பலவாணன்—சபையில் வாழ்பவன். வாழ்நன் வாணனென்றாயது.

19. சேர்த்துமா—சேர்த்துமாறு; கடைக்குறை.

## IV. திருஞானசம்பந்தர்.

[ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை—4.]

இந்தப்பாட்டுச் சைவத் திருமுறைகளு ளொன்றாகிய பதினொன்றாந் திருமுறையிலுள்ள ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவையில் வருவது. இக்கோவை பாடினவர் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி. இவர் ஆதி சைவப் பிராமணர். மேற்கூறிய சைவத் திருமுறை வகுத்தவரும் இவரே. இவர் இத்திருமுறைகளை அபயகுல சேகரனென்னும் இராசராச சோழன் வேண்டுகோளின்படி வகுத்தார். இவர் பாடிய பாட்டுக்களெல்லாம் பதினொன்றாந் திருமுறையிற் காணப்படும். சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச்செய்த திருத்தொண்டத் தொகையைப் பின்பற்றி, அதிற் கூறிய சிவனடியார் சரிதத்தைத் தொகுத்துத், திருத்தொண்டர் திருவந்தாதியென்றொரு சிறு நூல் இவரியற்றினர். இதனை ஆதாரமாகக்கொண்டே பின்பு பெரிய புராணம் சேக்கிழாரால் பாடப்பட்டது.

இராசராசன் கி. பி. 985—ம் ஆண்டுதொடங்கிக் கி. பி. 1013—ம் ஆண்டுவரையும் அரசுபுரிந்தவன். இராசராசன் மகனாகிய இராசேந்திரச் சோழன் காலத்தும் நம்பியாண்டார்நம்பி இருந்தவராகத் தெரியவருதலின் அவர் காலம் பதினொன்றாம் நூற்றாண்டாகும். (Vide *Tamil Studies*, pp. 220 and 293.)

மும்மணிக்கோவை என்பது மூன்றுவகை இரத்தினங்களைக் கோத்த மாலை என்று பொருள்படும். அஃது இங்கே, ஒப்புமையான், ஆசிரியப்பா, வெண்பா, கலித்துறை என்னும் மூன்றுவகைப் பாக்களாலாகிய நூலிற் காயிற்று.

திருநாரையூர் தென்னார்க்காட்டு ஜில்லாவில் சிதம்பரந் தாலுகாவில் மன்னார்குடிக்குச் சமீபத்திலுள்ளது.

இப்பாட்டுத் திருஞான சம்பந்தர் செய்த அற்புதங்களைக் கூறுமுகத்தான், அவரது சரித்திரத்தைச் சுருக்கிச் சொல்லுகின்றது. இது, இஞ்ஞாலத்தில் ஞானசம்பந்தன் (25) படர்சடைக் கடவுளருளால் (2) பிறந்தது கழுமலத்தில் (3); வளர்ந்தது பூங்குழன்மாதிடு போனகமுண்டு (5); பெற்றது செம்பொற்றாளம் (7); தீர்த்தது பெண்ணின் கணவனை விடம் (9); அடைத்தது கதவு (11); ஏறினது முத்தின் சிவிகை (13); பாடினது ஆண்பனையைப் பெண்பனையாக (15); கொண்டது ஆயிரம்பொன் (17); கண்டது சமணரைக் கழுவின்மேல் (19); நீத்தது தம்பங்களை (21); நினைந்தது ஓடம் அக்கரைச்செல்ல (23) என்று முடியும்.

ஞானசம்பந்தர் சரித்திரமும் நம்பியாண்டார் நம்பி சரித்திரமும் ஆறுமுகநாவலர் செய்த பெரிய புராண வசனத்தில் பரக்கக் காணலாம்.

1. கடகரியது—கடம் + கரி + அது: கடம் மதம்; கரி கரமுடையது (கையுள்ள விலங்கு), யானை; அது—இதனைப் பகுதிப்பொருள் விகுதி என்பர்; உண்மையில் இது சுட்டுப்பெயரே; இது செய்யுளிலே பெயரையடுத்துவரும், வசனத்தில் வாராது. இது இச்செய்யுளிலே "திருவருளது" (2), "கடிநகரது" (3), "தாளமவை" (7) என மேலும் வருதல் காண்க. பிறபாஷைகளிலும் இவ்வாறு வரும்.

இங்கே கடகரி என்றது யானைவடிவெடுத்த கஜாசுரனை. அவனைச் சிவபெருமான் அட்டது "மாவயா அன்றுரிசெய் மைந்தன்" என்று தேவாரத்தில் குறிக்கப்பட்டுளது.—சம்பந்தர், திருப்பழுவூர், 6.

3. கழுமலம்—சீகாழி.

4–5. சிலம்பரையன்பெறு பூங்குழன்மாது—பர்வதராசன் புத்திரியாகிய பார்வதி (இமயமலையரசன் மகளாகிய உமாதேவி).

6. குழகன்—அழகுடையவன் (குழகு – அழகு); சொக்கன் என்பதும் இப்பொருளுடையது. கோலக்காப் புக்கு—திருக்கோலக்காவிற்குப் போய் கோலக்கா ஒரு சிவஸ்தலம்; இது சீகாழிக்குத் தென்மேற்கே ஒருமைல் தூரத்திலுள்ளது.

8. மருகல்-திருமருகலென்னும் சிவஸ்தலம்; இது தஞ்சாவூர் ஜில்லா நன்னிலந் தாலுகாவில் திருச்செங்காட்டங்குடிக்குச் சமீபத்திலுள்ளது.

10. *அரைசு—அரசு; எதுகைநோக்கி அரைசென்றாயிற்று. இங்கே திருநாவுக்கரசு சுவாமிகளைக் குறிக்கும். அவரும் ஞானசம்பந்தரும் சேர்ந்து வேதாரணியத்துக் கோயிற்கதவு திறக்கவும் சாத்தவும் பாடினதை அவர்கள் சரித்திரங்களிற் காண்க. இது அப்பர் தேவாரத்தில் "பண்ணினேர் மொழியாள்" என்ற பதிகத்தாலும் சம்பந்தர் தேவாரத்தில் "சதுரம்மறை" என்னும் பதிகத்தாலும் தெரியவரும்.*

11. *குரைசேர் குடுமி—ஒலிக்கின்ற சுழியாணி.* The corner pin of a door which is fitted into a hole in the sill.

12. *ஏறிற்று—ஏறினது. அத்தியும் மாவும் தவிர—யானையும் குதிரையு மன்றி. அத்தி – அத்தமுடையது; அத்தம் கை. மேலே (1) கரி என்றது காண்க.* Skt. hastin. *அரத்துறை—இது திருநெல்வாயிலரத்துறையென் னும் சிவஸ்தலம், தென்னார்க்காட்டு ஜில்லாவில் நிவாநதிக் கரையிலுள்ளது.*

14. *ஓத்தூர்—திருவோத்தூர். இத்திருப்பதி வேலூர் ஜில்லாவில் செய் யாறுத் தாலுகாவிலுள்ளது. ஓத்து – ஓதப்படுவது; வேதம். ஆண்பனை பெண்பனையானது "குரும்பை யாண்பனையீன்குலை யோத்தூர்" என்று தேவாரத்தில் குறிக்கப்பட்டுளது—சம். ஓத்தூர், 11.*

17. *ஆவடுதுறை—திருவாவடுதுறை. இது தஞ்சாவூர் ஜில்லாவில் மாயூ ரத்துக்குச் சமீபத்திலுள்ளது. இவ்விடத்தில் பெரிய சைவமட மொன்று உண்டு. இங்கே சம்பந்தர் பொன்பெற்றது "கழுமலவூரர்க் கம்பொனாயிரங் கொடுப்பர்போலு மாவடுதுறையனாரே" என அப்பராற் கூறப்பட்டுளது. அப்பர், திருவாவடுதுறை, 1.*

18. *உறியொடுபீலி – உறி—நீர்க்கரகம் வைக்குமுறி. பீலி—மயிற்பீலி. கொல்லாவிரதிகளான சமணமுனிவர்கள் தாம்செல்லும் வழியிலுள்ள பூச்சி புழுக்களை ஒதுக்குவதற்கு உபயோகிப்பது மயிற்பீலி. பறிதலை—மயிர்பறித்த தலை. சமணமுனிவர்கள் தலையிலுள்ள பேன் நாசமடையுமென்றஞ்சித் தலைமயி ரைக் கையாற் பிடுங்குவதன்றிச் சவரம் செய்வதில்லை.* 19. *மிசை—மேல்.*

20. *அவிழ்ச்சுவை—சோற்றின் சுவை.*

21. *அரனடிபரவும் தமிழ்ச்சுவை – தேவாரமுதலிய தமிழ்ப்பாட்டின் சுவை. தம்பம்—தூண், மரம். இவ்வடிகளோடு "ஆரியத்தொடு செந் தமிழ்ப்பயனறிகிலா—வந்தகர்" என்பதனை ஒப்பிடுக. சம்பந்தர், திருவால வாய், மானினேர் மொழி, 4.*

22. *அள்ளல்—சேறு. பழனம்—வயல். கொள்ளம்—சேறு. புது ஊர்— பூதூர்; இது புத்தூர் என்றும் புணரும்.*

23. *ஓடம்—(நீரில்) ஓடுவது. ஓடம் ஓட்டினது "ஓடம்வந்தணையுங் கொள்ளம் பூதூர்" என்று தேவாரத்திற் குறிக்கப்பட்டுளது—சம்பந்தர், கொள்*

ளம்பூதூர், 6. கொள்ளம்பூதூர் தஞ்சாவூர் ஜில்லாவில் குடமுருட்டியாற்றின் கரையிலுள்ளது.

24. மிக்கவர் – பெரியோர். ஊனசம்பந்தம் – குறைவான பந்தம், கட்டு. உயக்கொளவல–உய்யக்கொள்ளவல்ல.

## V. இரசவாதம்.

[கந்தபுராணம், மார்க்கண்டேயப்படலம், 114–146.]

கந்தபுராணமென்பது வடமொழியிலுள்ள பதினெண் புராணங்களு ளொன்றாகிய ஸ்காந்தபுராணத்தின் சங்கர சங்கிதையில் சிவரகசிய கண்டத்தில் வரும் சம்பவகாண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷகாண்டம், என்னும் முதலாறு காண்டங்களின் மொழிபெயர்ப்பு. இதனை மொழிபெயர்த்துப் பாடினவர் கச்சியப்ப சிவாசாரியர். இவர் காஞ்சிபுரத்துள்ள குமரகோட்டத் தருச்சகர்; ஆதிசைவப் பிராமணர். இவர் காலம் இற்றைக்கு நானூறு வருடங்களுக்குமுன். இவர் இப்புராணத்தைத் தவிர வேறொன்றும் இயற்றினதாகத் தெரியவில்லை.

இம்மார்க்கண்டேயப்படலம் அசுரகாண்டத்தில் வருவது. இக்கதை வடமொழியிலுள்ள ஸ்காந்தத்தில் சொல்லப்படவில்லை.

1. மாவதத்தினை – பெரியகொலையை. வதம் – கொலை. ஆவதத்தம் – (ஆபத் அத்தம்–)ஆபத்துக்காலத்துதவும் திரவியம்; எய்ப்பினில் வைப்பு அரிபுரம்–சிங்கபுரம்.

2. மூவகைப்பொருள்–அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருள். இருநிதிக்கிறை–குபேரன். இருநிதி–சங்கநிதியும் பதுமநிதியும்.

3. மேவலர்–பகைவர். புவி–பூமி. மனமருள்செய்வதோர் வாதி–மனத்தை மயக்கும் இரசவாதி.

7. அது என்பதை, அது எவர்க்கும் பேசுந் தன்மையதன்று; அது குரவர்பாற் பெரிதும் நேசம் பூண்டவர்க்குரைப்பது என முன்னும்பின்னுங் கூட்டுக.

9. நாகம்–காரீயம்.

10. வங்கம் – ஈயம்; வெள்ளியுமாம். நொய்தின் – விரைவில். அன்னது – அது, மேற்சொன்னது. வலியுறக் காட்டுதும் – நிலைபெறுத்திக் காட்டுதும்.

11. தரணியண்டம் – மண்ணண்டம்; தரணி – மண். வல்லவாறு–நாம் வல்லவைகள், வல்ல வித்தைகள்.

12. மன்றன் மாளிகை–வாசனை பரிமளிக்கின்ற வீடு. வகுத்தல்–சொல்லல்.

14. உடுக்கணங்கள்...நகைத்தான் — நக்ஷத்திரக்கூட்டங்கள் இரவிலே ஒருசேரத் தோன்றினாற்போலச் சிரித்தான்; பற்கள் தெரியச் சிரித்தான் என்றபடி. நத்தம்—இரவு. படுதல்—தோன்றுதல்.

15. முகம்—உலைமுகம்.

17. பொருமதத்தினையிழைத்திடும் — பொரும் மதக்கரி, அதத்தினை இழைத்திடும் மதக்கரி என்று கூட்டுக. அதம் — கேடு. வருமது அத்தம் என்று—இதனால் வருவது திரவியம் என்றெண்ணி. நிறுவுதல்—நிறுத்தல்.

19. செழும்பொன் இரட்டி தூக்கிய இரதம் — பொன்னைப்போல் இரண்டுபங்கு நிறையுள்ள இரதம். ஒரு சிலையிட்டு மருட்டி—ஒரு கல்லிலிட்டுக்கலந்து. சிலை அம்மியுமாம்.

20. பண்ணுறுத்திய கனகம்—பக்குவம்செய்த பொன். அதன்பாலும்—அப்பொன்னின் பக்கத்திலும். எண் உறுத்திய—அளவிடுதற்கு. மிசைக்கணும்—மேலும். களங்கம் ஒன்று இட்டு—ஒரு புள்ளியிட்டு. மண் உறுத்தி—மண்பூசி. நல்துகில் கொடுபொதிந்து—சீலைசுற்றி. இதனை மண்சீலை செய்தல் என்று வழங்குவர். கண் உறுத்திய—கண்ணை வருத்திய. மருங்கு—பக்கம்.

21. குக்குடபுடம் — கோழிப்புடம்; ஒரு கோழியுயரம் வரட்டியை அடுக்கி இடும்புடம். புடம் — சரக்குகளைப் பச்சிலைகளால் சுற்றிமூடி அதன் மேல் மண்பூசி நெருப்பிலிட்டுச் சுட்டு மருந்தியற்றும் முறைக்குப் புடபாகம் அல்லது புடமிடுதல் என்று பெயர். வீற்று வீற்றதாகவிட்டு—வெவ்வேறாகச் செய்து. மாற்றுவந்தது—மாற்று உயர்ந்துவிட்டது. வராகி-வராகபுடம்; ஒரு மருந்து என்பாருமுளர்.

22. சேமம்செய்தது—காற்றுப் புகாமல் மூடப்பட்டது. மறவோர் ஈமம் செய்த செந்தழல்—மறவோரைச் சுட்ட விறகிலுள்ள அக்கினி. அங்கியும் அவனெதிர் துரந்தான்—அக்கினியையும் தருமதத்தனெதிரில் செலுத்தினான்.

26. உரையாடலை—உரையாடாதவன், வினையாலணையும்பெயர். உரையாடலையாகி—உரையாடாமல். வெஃகல்பெறாய் — வெஃகாது, விரும்பாது. கண்டிடலின்று — காணாது; இன்றி என்பது இன்று என்றாயிற்றுச் செய்யுளாதலின். நன். சூத். 173. கோது—குற்றம்.

27. நெய்—புழுகு. நீலி—துர்க்கை. 28. செய்கு—செய்வேன்.

29. காவதம்......போவதுசெய்து—ஒருநாழிகைக் கொருகாதம் நடந்து சென்று. வாவினன்—ஓடி. வளாகம்-இடம்.

31. நீலியிருக்கை—துர்க்கைகோயில்.

32. அடுத்து—மாளிகையைச்சேர்ந்து. இரும்பதுவாக—இரும்பாயிருக்கக் கண்டு; கண்டு என்றொருசொல் வருவிக்க.

## VI. திரௌபதி மாலையீடு.

[பாரதம்; திரௌபதி மாலையிட்ட சருக்கம், 1–58.]

இதுவும் இதனையடுத்து இதற்குப் பின்வரும் வீமதுச்சாதனர் யுத்தத்தைக் கூறும் பகுதியும் பாரதத்திலிருந்து எடுக்கப்பட்டன. பாரதம் என்பது பரதன் என்பவன் மரபிற்பிறந்த பார்த்திவர்களைக் கதாநாயகர்களாகவுடைய ஒரு நூல் என்று பொருள்படும். இங்கே குறிக்கப்படும் பரதன் சந்திரகுலத்திலே துஷ்யந்தன் என்னும் அரசனுக்குச் சகுந்தலை என்பவளிடம் பிறந்து தானும் அரசனாய்ப் பிரதாபமுற்று விளங்கியவன். இந்தப் பாரதத்தைப் பாடினவர் நடுநாட்டிலுள்ள சனியூரில் உதித்த வில்லிபுத்தூரர் என்பவர். இவர் வைஷ்ணவப் பிராமணர்; வீரராகவரென்பவரின் புத்திரர். இவர் இந்நூலை மேற்கூறிய நடுநாட்டிலே வக்கபாகையின் கணிருந்து அரசுபுரிந்த கொங்கர்குலாதிபனான ஆட்கொண்டான் என்பவன் கேள்விப்படி பாடினர். ஆட்கொண்டான் அக்காலத்திருந்த சோழராசன் படைத்தலைவன். இவ்வரலாறு பாரதத்துக்கு வில்லிபுத்தூரர் குமாரரான வரந்தருவார் பாடிய பாயிரத்தால் தெரியவருவது.

வில்லிபுத்தூரர் அருணகிரிநாதர் காலத்தவரென்ப. அருணகிரிநாதர் பிரபுடதேவராயரால் ஆதரிக்கப்பட்டவர். பிரபுடதேவராயர் பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தவர், இவரால் பிரபுடதேவராயபுரம் என்னும் கிராமம் பிராமணர்களுக்கு 1477-ம் ஆண்டு அளிக்கப்பட்டுள்ளது. ஆகவே வில்லிபுத்தூரரும் பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தவராவர். (Vide *Tamil Studies*—page, 393.)

1. இவர்—பாண்டவர். இருக்கை—குடியிருப்பு; இங்கே வேத்திரகீயமென்னு மூர். துரியோதனன் பாண்டவர்களைக் கொல்லும்படி செய்த அரக்குமாளிகையிலிருந்து அவர்கள் தப்பி வந்து வேத்திரகீயத்தையடைந்து, அங்குள்ள பிராமணர்களுக்குப் பகனென்னும் ராக்ஷசனால் நிகழ்ந்த துன்பத்தை அவனைக் கொன்று நீக்கி இருக்குநாளில் என்க. அங்கண்மாஞாலம்—அழகிய இடமகன்றபூமி. சூழ்ந்தது—எண்ணிச்செய்தது.

2. வான்மொழி – ஆகாயவாணி, அசரீரிவாக்கு. தேசிகன் – உலூகமுனிவன். உரத்தினர்—பாண்டவர்.

3. தான் வரித்தவற்கே—தன்னால் தெரிவு செய்யப்பட்டவனுக்கே. கான்—வாசனை. வரிச்சுரும்பு—பாட்டுக்களைப் பாடும் வண்டு. ஓலை – திருமுகம். தேன்வரித்தென்ன—வண்டுகள் விரும்பிச் சூழ்ந்தாற்போல.

4. பதி—வேத்திரகீயம். மனத்தேர்—மனவூக்கமாகிய தேர்.

5. சாரதந்திரம்—உண்மை நூலறிவு. சாரம்—உண்மை; தந்திரம்—நூல், நான்கு வேதங்களைப் பாரதத்தோடு ஐந்தாகும்படி பகர்ந்தவன்—வேதவியாசன். நீரதநெறி—நீரற்றவழி. அதம்—கேடு.

7. மைப்புறப்பார்த்தன் – கரியநிறமுள்ள அருச்சுனன். பார்த்தன்– பிருதை குமாரன். விளக்கு ஆர–விளக்குப்பொருந்த.

8. விஞ்சைவேந்தன்–வித்தியாதர அரசனாகிய சித்திராங்கதன்; அவன் தேரை அர்ச்சுனன் அக்கினியஸ்திரத்தால் கரியாக்கினான். இருந்தை–கரி.

9. ஆற்று–வழியிலுள்ள. உற்கசதீரம்–உற்கசதீர்த்தக்கரை

10. புலர்ந்தன–கங்குற்போது விடிந்தது; பனி காய்ந்தது.

11. நன்று நன்று உதவ–(நுமது) புண்ணியம் நன்மை பயக்க. நன்று நன்று என்பதனை அடுக்காகக்கொண்டு "(யாகசேனனுக்க) உதவவந்தீர் இது நன்று நன்று" என்று பொருள்கொள்வாரும் உண்டு. தென்றல் எழு வாய்.

12. பதம் பதனென்றாயதும் இறகு இறகரென்றாயதும் போலி. பல அரசர் இருந்து இரங்க அருச்சுனன் வில்லைவளைத்துத் திரௌபதியை அடைவன் என்று குறிப்பித்தமையின் நன்னிமித்தமாயிற்று.

13. வண்துறை, தண்துறை – இரண்டிடத்தும் துறை நீர்த்துறை. விண்டு உறை கிழிய ஓடி–உறை விண்டு கிழிய ஓடி. உறை–நீர்.

14. மா – கருமை. குரல் – மயிர். அளகம் – பெண்மயிர். உரல் அடி கொள்யானை–உரல்போன்ற அடியை உடைய யானை. cf. கறையடி. கூக் குரல் விளிப்பபோலும்–கூவுகின்ற சத்தத்தால் அழைப்பனபோலும்.

16. ஏற்றிளஞ் சிங்கம் போல்வார் காவில் எல்லா மருங்குதோறும் மொய்ப்ப, வைக, மேவ, புல்லக்கண்டு கண்களித்து நின்றார் என்க.

17. வாரணமாயை–காக்குந் தன்மையதான மாயை. வாரணம் – பாது காப்பு. பம்பி – மிகுந்து. ஆரவம் – அரவம்; முதனீண்டது. திருமாலின் தொழில் காத்தலாதலின் வாரணமாயை சூழ்ந்தமாயவன் என்றார்.

18. மங்கலமுழவம்–மணமுரசு.

19. தொடங்கியும் – உற்பவித்தும். தொடக்கம்தொட்டுத் துகள் அற வளர்ந்தும்–உற்பவித்த நாள் தொடுத்துக் குற்றமறவளர்ந்தும். மீளமடங்கியும்–பின்னர் நாசமடைந்தும்; சிருட்டி, திதி, சங்காரம் என்னும் முத்தொழில் வாய்ப்பட்டுக்கிடக்கும் உயிர். முடங்கிய–வளைந்த.

20. மழைப்புறமாடம்–மேகில்தங்கிய புறத்தினையுடைய மாடம். புறம்– முதுகு. வருநர்–வருபவர்.

21. பாண்டவர் பிராமண வடிவங்கொண்டிருந்தமையின் ஆண்சிங்கம் பசுவின்தோலைப் போர்த்திருந்தாலன்ன செய்கையையுடையவர் என்றார்.

22. தூக்கணங்குரீஇ என்பது எதுகைநோக்கித் தூங்கணங்குரீஇ என் றாயிற்று; இது மெலித்தல் விகாரம். தேம் கள் மாத் தெரியல் – இனிய தேன்பொருந்திய, வண்டுகள் மொய்க்கின்ற, மாலை. மஞ்சம்–கட்டில்: இது

ஊஞ்சல்போல்வது; மேலேகட்டித் தூங்குவது; கட்டித்தூங்குவதனால் கட்டில் என்று பெயர் பெற்றது.

23. இதுமுதன் மூன்று பாட்டுக்கள் திரௌபதியின் செய்கையைக் கூறுவன.

26. சேண்புனல்—கங்கா தீர்த்தம். சேண்—ஆகாயம். ஆண்மை—ஆண்மைக்குணம்; அவை அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்பன. காமரு கோலம்—அழகிய ஒப்பனை.

28. அழற் பிறந்த பாவை—திரௌபதி. கழைத்தனுவோன்—கருப்புவில்லையுடைய மன்மதன். பாவம்—காதல்; Skt. bhava—love.

29. மங்குலின் மங்குல் மூடி—ஆகாயத்தின் கண்ணே முகிலான் மூடப்பட்டு. பார்வை—கண்.

30. ஏமாந்து—களிப்புற்று. சினக்களிறு, கடமொழுகும் கன்னக்களிறு என்றியையும்.

31. கடுந்திரிகை வேகத்துத்திகிரி, இலைமுகத்துத்திகிரி, உழலுகின்ற எந்திரத்திகிரி என்றியைக்க. திரிகை—சுற்றுதல். இலைமுகம்—ஆர்பொருந்திய முகம். உழலுதல்—சுழலுதல் நாப்பண்—நடு.

32. திரௌபதியினுடைய கண்போன்ற அம்பும் நுதல்போன்ற வில்லும். மலர்ப்பெண்—திருமகள், இலக்குமி.

33. திருந்து ஆர்—திருந்துதல் ஆர்ந்த, ஒப்பனை செய்யப்பட்ட. மன்றல்—வாசனை. புக்கிருந்தார் ஒருசொல்; புக்கவர்கள் என்னும் பொருளது. இரு—பகுதிப்பொருள் விகுதி. இருந்த — அங்கேயிருந்த. முருந்து — இறகினடி முள்ளு.

34. சிந்தை சீற்றம் கொண்டழல என்று மாறுக. ஏற்றம்—உயர்ச்சி, பெருமை.

35. மணி — பணமணி. பணி — பாம்பு. ரஃறலை — பலதலை. கொடுமை வகிர் — கொடுமையின் துண்டம்; வகிர்—பிளவு.

36. உலைவந்து—உலைந்து, வருந்தி. காந்தாரம்—ஒருதேயம், Kandahar.

37. செஞ்சிலைக்கை ஆசான்மைந்தன்—துரோணர் புத்திரனாகிய அஸ்வத்தாமன். ஈசானன்—சிவன்.

38. உறவு—நட்பு. உரை—சொல். நெறி—நல்லொழுக்கம். தேசு—புகழ்.

39. பொதுவர் — இடையர். முகிலூர்தி—இந்திரன். இந்திரனுடைய அந்தச் சுவர்க்கலோகத்திலுள்ள கற்பகச்சோலை (இவனுடைய மனைவியர்களிருக்கும்) அந்தப்புரத்திற்சோலையாம். ஆராமம்—சோலை. அந்தப்புரம் — அரசன் தேவிபுனையில்லம். கடைசியடியில் குறித்தது கிருஷ்ணன் சத்தியபாமையின் வேண்டுகோட்படி சுவர்க்கலோகத்துக் கற்பகச்சோலையிலுள்ள

பாரிஜாத விருக்ஷத்தைக் கவர்ந்துவந்து துவாரகையில் அவளுடைய அந்தப்புரத்து நந்தனவனத்தில் வைத்ததை. தெலுங்கிலுள்ள பாரிஜாதாபகரணம் என்னும் நூல் இதனை விரித்துக் கூறும்.

40. கண்ணன் தன்னைக் கார்முகத்தை அவமதித்துப் புன்சொற்கழறும் திண்ணென் கருத்தான் என்று கொண்டு கூட்டுக. சேதி — ஒருநாடு Bundelkhand in Central India.

41. இமிர்தல்—ஒலித்தல். புறங்காணல்—முதுகுகாணல், தோற்கச்செய்தல். மதுராபுரி—Muttra. துவாரகை—Dwārakā in Kattywar. கார்வண்ணன்—கிருஷ்ணன்.

42. வினை—யுத்தம். முனை—போர்முனை. தருக்கு—கர்வம்.

43. சல்லியன்—மத்திரதேசாதிபதி, King of Madra. நீலன்—ஓரரசன். வழுதி-பாண்டியன். இரவிகுலம்-சூரியகுலம். வளவன்—சோழன். செந்தழலோன் மரபு — அக்கினிகுலம்.

44. பதினெண்புவி — பதினெண்பாஷை பேசும் நாடுகள். 'அரசு' என்ற அஃறிணைக்கேற்கத் 'திரண்ட'வென்றார். பூவை—நாகணவாய்ப்புள். தோகை—மயில்.

45. தவர்—வில். சாயகம்—அம்பு. பவர் — கொடி. சக்கரத்தில் குடத்துக்கும் வட்டைக்கும் இடையிலுள்ள சட்டம். கவரின்—எறிந்து வீழ்த்தினால்.

46. கைத்தாயர் — செவிலித்தாயர். அரியாசனம்—சிங்காசனம். முகத்தானை மொழிந்தகாலை—திரௌபதிக்குச் சொன்னபோது.

47. அநுரூபம் அனுவுரு என்றாயிற்று; இதற்குப் பொருள் ஒத்த உருவம் (பார்ப்பாரைப்போன்ற உருவம்). அலாயுதன்—கலப்பைப் படைக்கலமுடையவன், பலராமன். வாசுதேவன்—வசுதேவன் புத்திரன், கிருஷ்ணன். மனுமுறைக்கு வரம்பாகி அவதரித்த, வருத்தம்வீட அவதரித்த என்று தனித்தனி இயைக்க.

48. அகங்கரித்து—அகங்காரம்கொண்டு, கர்வங்கொண்டு. மேரு சார் அப் பார வரிசிலை—மேருமலையை ஒத்த அந்தப் பாரமான வரிந்தவில். அமையும்—போதும். பரிசொடு—தன்மையினால்.

49. வல்லியம்—புலி. மல்லல்வாகு—வலியதோள். தகர்தல்—உடைதல்.

50. பூகதன்—பூமியை அடைந்தவன். பூகதனாகிய அன்றே—பூமியிற் பிறந்த அன்றே. மாகதன்—மகததேசத்தரசன். King of South Behar. வில்லின் மார்பு—வில்லின் முக்காற்பங்கு. சாகதன்—வலியவன். கொற்றம்—வெற்றி. தனு ஒருசாண் என-தனுவுக்கு ஒருசாண் உளது என்று சொல்ல. வீக்கினான்—வாங்கினான். வேந்தர் வேந்து—துரியோதனன்.

51. கழல்—வீரக்கழல். அரன் இருந்த கயிலை என்னும் மலை வருத்தம் அற எடுத்த நிருதன்—இராவணன். நிருதன்—ராக்ஷசன். சிந்த—சிதற, தகர்க்க.

52. உரவு—வலிமை. கரவுடன்—மறைவாக. நாப்பண்—நடு. கருமுகில் வாகனன் புதல்வன் – அருச்சுனன். கரியமேனி இரவிகுலச் சிறுவன்—இராமன். மன்றலிளங்கொடி—மணப்பெண். தம்முன்—தமையன் உருமே றென்ன இயம்பினுன் என இயைக்க. உருமேறு—பேரிடி.

53. மன்மரபு – அரசகுலம். இளந்தோகை தொடையல் சூட்டுமோ என. வீரன்—திட்டத்துய்மன். தகவன்றே மன்றலுக்குத் தாழ்வோ—பிராம ணருக்கு மாலைசூட்டுவது தக்கதன்றே? குறைவோ?

54. ஜயம்—வெற்றி. உளர் திகிரிச் சுழல் இலக்கு—சுற்றுகின்ற திகிரிக் கட் சுழலுகின்ற இலக்கு.

55. இவன் அவனேபோன்ம் என்று எண்ணி—இவன் அந்த அருச் சுனனேபோலும் என்று எண்ணி. தேம்சார—தேம்சார்; அ சாரியை; 'கொய்தார மார்பிற் கொழுநன்' (வெண். பொது. ௪.) என்றுற்போல. தேன் பொருந்திய என்பது பொருள். அருச்சுனன் கரியவனுதலின் நீலகிரி என் ருர்; நீலகிரி என்பதற்கேற்க மாலையை அருவியெனச் சேர்த்தினுள் என்ருர்.

56. ஆனகதுந்துபி—வசுதேவர். ஆனகதுந்துபிமுதல்வன்—வசுதேவரு டைய சிறந்த பிள்ளையாகிய கிருஷ்ணன். செம்பொன்மாலை—பொன்மாலை போன்ற திரௌபதி. சந்திரனுக்கு அசுவினி முதலிய இருபத்தேழு நக்ஷத் திரங்களும் மனைவியர்களென்றும் அவர்களுள் உரோகிணியிடத்து அவனுக்கு அதிக பிரீதி என்றுங் கூறுவர். இந்திரசூனு—இந்திரகுமாரனுன அருச்சுனன்.

## VII. வீமதுச்சாதனர் யுத்தம்.

[பாரதம், பதினேழாம் போர்ச்சருக்கம், 147–157.]

1. அப்பி—ஒற்றி, கையால்தட்டி. மொத்தினர்—அடித்தனர். தண்டு—கதாயுதம், club. வலமிடங்கொள் மண்டலம் முற பயிற்றினர் – முன்னே வலசாரி இடசாரி வந்தனர். திசையின் மண்டு இபக்கிரி—திக்குயானை. கிரி—மலை.

2. கொக்கரித்தனர் – கர்ச்சித்தனர். உக்கை – விருப்பு. விஞ்ச—மிக. அதிர்தல்—நடுங்கல். வஞ்சினம்—சபதம், சூள். கண்டகண்ட மகிபர் மனமுட்க.

3. சர்ப்பவர்க்கம்—பாம்புக்கூட்டம். கிரியந்தடங்கிரி—சக்கரவாளகிரி. பக்கு—பிளந்து. நெக்கது—பற்றுவிட்டது. திக்கயம்—திக்குயானை. விண்டது—பிளந்தது.

4. வண்புருவச் சிலைத்துணை முரிமுரிந்த – விற்போன்ற புருவங்களி ரண்டும் நெரிந்தன. தடித்தன—வீங்கின. கதையிட்டு—கதைகொண்டு.

5. கொளுந்தல்—முறுகுதல். முட்டியுத்தம்—குத்துச்சண்டை, boxing.

6. செறிய — நெருங்க. கரதலம் — கை. கருகி — கன்றி. அறனுற்ற கொற்றவன் அநுசன்—தருமராசன் தம்பியாகிய வீமன். உரகத்தனிக்கொடி நிருபர்தம் பெருந்தகை முற்கனிட்டன்—சர்ப்பக்கொடியையுடைய அரசர்க் கரசனாகிய துரியோதனனுடைய மூத்த தம்பி. பொருப்பு—மலை.

7. அனிலன்மைந்தன் — வாயுபுத்திரன். மூந்துதம்பி — மூத்ததம்பி. மத்தகம் — தலை. கனல்கொளுந்த—அக்கினிபற்ற. தெறிக்க — முரிந்துபறக்க. மினல்—மின்னல்; விகாரம்.

8. பதயுகம் — இரண்டு பாதம். விதவிதம்படும் — விதம்விதமான, பல வகையான. புடைபட்டு—அடிபட்டு. விசிநரம்பு—கட்டுநரம்பு. சந்து—பொருத்து. பலவரையுடன் பொருந்திய நற்கழுத்து—வரிகள் பொருந்திய கழுத்து.

9. உறப்பிடித்து—நன்றாகப்பிடித்து. பற்றியிட்டு—பிடித்துப்போட்டு. அயிர்—நுண்மணல். துகள்—தூள். இரண்டினும்—இரண்டாலும். துகைத்து—உழக்கி. செயிர்—கோபம். அவுணக்குலத்திறை உயிர்கவர்ந்த சிங்கம்—இரணியனுடைய உயிரைக் கவர்ந்த நரசிங்கம்.

10. சொட்டை — ஓராயுதம். உரத்தலம் — மார்பு. வகிர — பிளக்க. துகிர்—பவளம். பவர்—கொடி. பகிரதன் தரும் கடவுள்துறைப்புனல்—கங்கை நீர்

11. வெந்நிட்டது—புறங்காட்டினது. வெந்—வெரிந்; முதுகு.

## VIII. திருவாசகத்தின் சிறப்பு.

### [நால்வர் நான்மணிமாலை—4]

நால்வர் நான்மணிமாலை என்பது சைவசமயாசாரியர்களாகிய சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வரையும் புகழ்ந்துபாடிய நூல். இது துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகளாற் செய்யப்பட்டது. சிவப்பிரகாசசுவாமிகள் காஞ்சிபுரத்திலிருந்த குமாரசுவாமி பட்டாரகரின் மூத்த புத்திரன். வேலையசுவாமிகள், கருணைப்பிரகாசர் என்னும் இருவரும் இவர் சகோதரர். இவர் மூவரும் தமிழ்ப்புலவர்; தமிழில் பல நூல்கள் செய்திருக்கின்றனர். சாந்தலிங்கசுவாமிகள் என்பவர் சிவப்பிரகாசரின் தங்கையாகிய ஞானம்பிகையை மணஞ்செய்துகொண்டவர். இவர்களெல்லாரும் வீரசைவர். சிவப்பிரகாசருக்குத் தமிழாசிரியர் திருநெல்வேலியிலிருந்த தருமபுரவாதீனத்து வெள்ளியம்பலத் தம்பிரான்; ஞானாசிரியர் பொம்மையபாளையத்துச் சிவஞான பாலையசுவாமிகள். இவர் செய்த நூல்கள் பல. அவற்றுள் முக்கியமானவை பிரபுலிங்கலீலை, வேதாந்த சூடாமணி, சித்தாந்த சிகாமணி, தருக்க பரிபாஷை, வெங்கைக்கோவை, வெங்கையுலா, ஏசுமத நிராகரணம் முதலியன. இவர் ஏசுமத நிராகரணத்தைத் தமிழில் சதுரகராதிசெய்த வீரமாமுனிவரோடு (Constantine Beschi)

வாதிட்டுச் செய்தனர் என்ப. ஆகவே இவர் காலம் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும்.

1. விளங்கிழை—அன்மொழித்தொகை; விளங்குகின்ற ஆபரணங்களையுடைய உமாதேவி. பகிர்ந்த—பங்கிட்டுக்கொண்ட. அர்த்தநாரீசுர மூர்த்தம் பாதி சிவனுருவும் பாதி உமையுருவுமாயிருத்தல்பற்றி "விளங்கிழை பகிர்ந்த மெய்" என்றார்.

2. காரணன்—முதற்கடவுள். முக்கட்காரணன் — சிவன். ஆரணம்—வேதம்; ஆரண்யகம் என்பதன் சிதைவு.

3. ஆதி—முதற்கடவுள்; சிவன். வாதவூரண்ணல் — மாணிக்கவாசகர். இவர் வாதவூரில் பிறந்தவர். வாதவூர் மதுரை ஜில்லா மேலூர் தாலுகாவிலுள்ளது.

4. வாசகம்—திருவாசகம்.

6. விழிநீர்—கண்ணீர். பெருக்கி—பெருகவிட்டு, சொரிந்து.

10. தொடுமணற்கேணியின்—மணலின்கண் தோண்டிய கேணிபோல. சுரந்து—ஊறி.

11. மெய்ம்மயிர்பொடிப்ப—உடம்பில் மயிர் சிலிர்க்க. விதிர்விதிர்ப்பு—நடு நடுக்கம்.

12. ஆகுநர்—ஆகுபவர்.

13. மன்பதை—மக்கட்பரப்பு.

# அரும்பதவகராதி.

அகங்கரித்தல் — அகங்காரங்கொள்ளுதல், கர்வங்கொள்ளல்.
அகழி—அகழ்.
அகழ்தல்—தோண்டுதல்.
அங்கம்—உடல், உறுப்பு.
அங்கி—அக்கினி.
அங்குலி—விரல்.
அடல்—வெற்றி.
அடுதல்—கொல்லுதல்.
அணங்கு—தெய்வப்பெண்.
அதம்—கேடு.
அதிர்தல்—அசைதல், நடுங்கல்.
அத்தம்—கை, பொருள்.
அத்தி—யானை.
அத்திரம்—அஸ்திரம், அம்பு.
அந்தணன்—பிராமணன்.
அந்தரம்—ஆகாயம்.
அப்புதல்—பூசுதல், ஒற்றுதல்.
அமர்—சமர், யுத்தம்.
அமரர்—வானோர்.
அம்மா—வியப்பிடைச்சொல்.
அம்பலம்—சபை.
அயர்த்தல்—மறத்தல்.
அயிர்—நுண்மணல்.
அரசு—அரசன்.
அரவம் (1) ஒலி, (2) பாம்பு.
அரவு—பாம்பு.
அரற்றல்—அழுதல்.
அரியேறு—ஆண்சிங்கம்.
அருத்துதல்—உண்பித்தல்.
அருள்—இரக்கம்.
அலங்கல்—மாலை.
அலமரல்—சுழலல்.
அலாயுதன் — பலதேவன்; அலம்—கலப்பை.
அவனிபர்—அரசர்.
அவிழ்—சோறு.
அவுணன்—அசுரன்.
அவை — சபை.
அவையோர் — சபையோர்.
அழல்—அக்கினி.
அழலல்—எரிதல்.
அளகம்—பெண்மயிர்.
அளப்பு—அளவு.
அளித்தல்—கொடுத்தல்.
அள்ளல்—சேறு.
அறன்—அறம், தருமம்.
அனிலன்—காற்று.
அனுசன்—பின்பிறந்தவன், தம்பி.
அனுவுரு—ஒத்தவுருவம்.
அன்னை—தாய்.
ஆகம்—உடல்.
ஆடகம்—பொன்.
ஆண்மை—ஆளுந்தன்மை, வீரம்.
ஆயுள்—ஜீவனகாலம்.
ஆரணம்—வேதம்.
ஆரவம்—அரவம்; முதல்நீண்டது.
ஆராமம்—சோலை, பூந்தோட்டம்.
ஆர்த்தல்—ஒலித்தல், ஆரவாரித்தல்.
ஆவதத்தம் — (ஆவத் + அத்தம்) ஆபத்துக்காலத்தில் உபயோகப்படும் பொருள்.
ஆவணம்—கடை.
ஆறு—வழி.

ஆற்றல்—செய்தல்.
ஆன்—பசு.
இகத்தல்—நீங்குதல்.
இகலல்—மாறுபடல், பகைத்தல்.
இகல்—மாறுபாடு.
இச்சை—விருப்பம்.
இடும்பை—துன்பம்.
இணங்கல்—இசைதல், உடன்படல்.
இந்தனம்—விறகு.
இந்திரசூனு—இந்திரன்புதல்வன்.
இபம்—யானை.
இப்பி—சிப்பி.
இமிர்தல்—ஒலித்தல்.
இமைப்பு-கண்ணிமைப்பொழுது.
இயங்கல்—நடத்தல்.
இயம்—வாத்தியம்.
இரதம்—பாதரசம்.
இரிதல்—சாய்தல், பின்னிடல்.
இருக்கை—(1) ஊர், (2) கோயில்.
இருநிதிக்கிறை—குபேரன்.
இருந்தை—கரி.
இலை—ஆர்.
இழிதரல்—இறங்கல் ஒழுகல்.
இழை—ஆபரணம்.
இழைத்தல்—செய்தல்.
இளவல்—தம்பி.
இறை—அற்பம்.
ஈசானன்—சிவன்.
ஈட்டம்—கூட்டம்.
ஈமம்—பிணஞ்சுடும் விறகு.
உகுதல்—சொரிதல்.
உகவை—மகிழ்ச்சி, விருப்பம்.
உகிர்—நகம்.
உக்கிரம்—வேகம், கோபம்.
உடுக்கணம்—விண்மீன்கூட்டம்.
உடுத்தல்—சூழல்.
உட்கிடல்—பயப்படல்.
உண்டி—உணவு.
உண்மை—சத்தியம்.
உதரம்—வயிறு.
உதிரம்—இரத்தம்.
உத்தரித்தல்—செய்தல்.
உத்தரியம்—மேலாடை.
உமிழ்தல்—கக்குதல்.
உம்பர்—வானோர்.
உய்த்தல்—(1) செலுத்தல், (2) சேர்த்தல்.
உரகம்—பாம்பு.
உரப்பினர்—அதட்டினர்.
உரம்—மார்பு, வலி.
உரத்தினோர்—வீரர், வலியுடையவர்.
உரவு—வலிமை.
உரும்—இடி.
உரை—உரைத்தல்; பொன் முதலிய லோகங்களைக் கல்லில் மாற்றுப் பார்க்க உரைத்தல்.
உலப்பு—குறைவு, அழிவு.
உலைவருதல்—உலைதல்; வருந்தல்.
உவகை—மகிழ்ச்சி.
உவட்டு—பெருக்கு.
உவப்பு—மகிழ்ச்சி.
உளர்தல்—சுழலல்.
உழத்தல்—வருந்தல்.
உழலல்—சுழலல்.
உழுவை—புலி.
உறவு—நட்பு.
உறி—நீர்க்கரகம்முதலியவைவைக்கும்உறி.
உறு—மிகுதி.
உறை—நீர், மழைத்துளி, இருப்பிடம்.
உறையுள்—வீடு, இருப்பிடம்.
உற்பவித்தல்—தோன்றல்.
ஊக்கம்—உள்ளக்கிளர்ச்சி.
ஊனம்—குறைவு.
எஃகம்—வாள்.
எந்திரம்—யந்திரம்.

எயில்—மதில்.
எயிறு—பல்.
எய்தல்—அடைதல்.
எரி—அக்கினி.
எழில்—அழகு.
ஏ—அம்பு.
ஏமாத்தல்—மகிழ்தல், மயங்குதல்.
ஏவல்—பணி.
ஏறு—ஆண்.
ஏற்று, ஏற்றம்—உயர்ச்சி.
ஐராவதம்—இந்திரனுடைய யானை.
ஒல்லை—விரைவு.
ஒழுக்கம்—நடை.
ஓகை—மகிழ்ச்சி.
ஓடம்—தோணி.
ஓலை—திருமுகம்.
கங்குல்—இரவு, இருள்.
கச்சை—சீலைக்கயிறு.
கஞ்சுகன் — சட்டையிட்டவன்.
கடம்—மதம்; கடகரி—மதயானை.
கடி—காவல்.
கணவன்—நாயகன்.
கணை—அம்பு.
கண்—இடம்.
கண்டிகை—உருத்திராக்ஷமாலை.
கண்ணுதல்—சிவன்.
கந்தன்—முருகக்கடவுள்.
கமழ்தல்—மணம்வீசுதல்.
கரத்தல்—ஒளித்தல்.
கரவன்—கள்ளன்.
கரவு—மறைவு, வஞ்சகம்.
கரி—யானை.
கரு—கருப்பம், கருப்பை.
கருத்து—மனம்.
கருமா—பன்றி.
கலசம்—பானை.
கலம்—(1) மரக்கலம், (2) வட்டில்.
கலித்தல்—ஒலித்தல்.
கலுழி—கலங்கல்நீர்.
கல்—நங்கூரம்.
கவடி—பலகறை.
கவற்சி—கவலை.
கவின்—அழகு.
கவுள்—கதுப்பு.
கழல்—கொடையும் வீரமும் காரணமாக ஆடவர்காலி லணிவது.
கழறல்—சொல்லல்.
கழு—இருப்புமுள்.
கழை—கரும்பு.
களங்கம்—குற்றம், மாசு, புள்ளி.
கனல்—அக்கினி.
கனிட்டன்—தம்பி.
கன்னம்—கதுப்பு.
கன்னல்—நாழிகை.
கன்னி—புத்திரி.
காணுதல்—செய்தல்.
காதல்—ஆசை.
காந்தாரம்—ஒரு தேசம், Kandahar.
காயம்—உடல்.
காரணன்—முதற்கடவுள்.
கார்முகம்—வில்.
காலல்—கக்குதல்.
காவதம்—காததூரம்.
காவலர்—அரசர்.
காளை—இளைஞன்.
கானம்—காடு.
கான்—(1) வாசனை, (2) காடு.
கிளர்தல்—(1) எழுதல், (2) விளங்குதல், (3) மேற்படுதல்.
கீறல்-கிழிதல்.
குகை — (1) பஞ்சலோகங்களை யுருக்கும் பாத்திரம், (2) மலை முழை.
குக்குடபுடம்—கோழிப்புடம்.
குஞ்சி—மயிர்.
குடிலம்—வளைவு.

குமிழ்—கதவின் கழியாணி.
குடும்பம்—சம்சாரம்.
குத்திரம்—வஞ்சகம்.
குய்—தாளித்த கறி.
குரல்—கூந்தல், ஒலி.
குரவர்—குருக்கள், ஆசாரியர்.
குரிசில்—பெருமையிற் சிறந்தவன்.
குருதி—இரத்தம்.
குரை—ஒலி.
குலக்கலை—சிறந்த ஆண்குரங்கு.
குலாலன்—குயவன்.
குவால்—குவியல், மேடு.
குழகன்—அழகன், சிவன்.
குழல்—கூந்தல்.
குழை—ஒருகாதணி.
குறுகல்—கிட்டல்.
கூர்தல்—மிகுதல்.
கூம்பு—பாய்மரம்.
கூன்—வளைவு.
கேணி—நீர்நிலை.
கேண்மை—உரிமை, நட்பு.
கேழல்—பன்றி.
கைக்கட்டி—கைக்கவசம்.
கைதவம்—சூது, வஞ்சனை.
கைத்தாயர்—செவிலித்தாயர்.
கொக்கரித்தல்—கர்ச்சனைசெய்தல்.
கொண்டல்—மேகம்.
கொளுந்தல் — நெருப்புப் பற்றுதல், [முறுகுதல்.
கொள்ளம்—சேறு.
கொற்றவர்—அரசர்.
கோகிலம்—குயில்.
கோட்டுதல்—வளைத்தல்.
கோண்—வளைவு.
கோண்மீன்—சுறா.
கோதையர்—பெண்கள்.
கோலம்—வேடம், அழகு.
கோன்—அரசன்.
சடிலம்—சடை.
சந்து—சந்தனம்.
சமர்—அமர், யுத்தம்.
சம்பந்தம்—சேர்க்கை.
சம்பு—சிவன்.
சரக்கு—பொருள்.
சரதம்—உண்மை.
சரம்—அம்பு.
சாகதன்—வலியவன்.
சாயகம்—அம்பு.
சாரம்-உண்மை; சாரதந்திரம்-உண்மை [நூல்.
சாரல்—சார்தல், மலைப்பக்கம்.
சார்ங்கம்—திருமால்வில்.
சித்திரம்—அழகு, ஓவியம்.
சிந்தல்—சிதறல்.
சிந்தை—மனம்.
சிரம்—தலை.
சிலம்பு—மலை; சிலம்பரையன்—மலைய ரசன், இமயமலை.
சிலீமுகம்—அம்பு, பாணம்.
சிலை—(1) கல், (2) வில்.
சிவிகை—பல்லக்கு.
சிறை—காவல்.
சினம்—கோபம்.
சீற்றம்—கோபம், சினம்.
சுணங்கு—தேமல்.
சுயோதனன்—துரியோதனன்.
சுரத்தல்—ஊறுதல்.
சுரிகை—உடைவாள்.
சுரும்பு—வண்டு.
சூல்—கரு.
சூழ்தல்-சுற்றுதல், எண்ணிச்செய்தல்.
சூனு—மகன்.
செங்கதிர்ச்செல்வன்—சூரியன்.
செம்மல்—பெருமையிற் சிறந்தவன்.
செயிர்—சினம்.
சேண்—ஆகாயம்.

சேதி—ஒரு நாடு, Bundelkhand.
சேமம்—காவல்
சேமித்தல்—பொதிந்துவைத்தல்.
சொட்டை—ஓர் ஆயுதம்.
சோதிடம்—கணிதம்.
சோரன்—கள்ளன்.
ஞாலம்—பூமி.
தகவு—பெருமை.
தக்கணம்—வலம்.
தட—பெருமை.
தடம்—தடாகம்.
தண்டு—தடி, தண்டாயுதம்.
தந்திரம்—நூல்.
தபோதனன்—தவச்செல்வன்.
தப்புதல்—தவறுதல்.
தம்முன்—தமையன்.
தம்பம்—தூண், மரம்.
தரணி—பூமி, மண்.
தரணிபர்—அரசர்.
தவர்—வில்.
தழல்—அக்கினி.
தளர்வு—தளர்ச்சி.
தனஞ்சயன்—அருச்சுனன்.
தனயை—புத்திரி, மகள்.
தனு—(1) வில், (2) உடல்.
தாது—பூந்தாது, பொன்.
தாபதர்—முனிவர்.
தாமம்—பூ, மாலை.
தார்—(1) மாலை, (2) கயிறு.
தாழ்தல்—தங்குதல்.
தாளம்—கைத்தாளம்.
தானை—சேனை.
திகிரி—சக்கரம்.
திணித்தல்—அடைத்தல், துறுத்தல்.
திண்மை—கலங்காநிலைமை.
திரளுதல்—சேர்தல்.
திரிகை—சுற்றுதல்.

திரிதல்—வேறுபடுதல்.
திருகுதல்—முறுகுதல், வளைதல்.
திலகன்—சிறந்தவன்.
தீட்டுதல்—எழுதுதல்.
தீரம்—கரை.
துகள்—(1) குற்றம், (2) புழுதி, தூள்.
துகிர்—பவளம்.
துகில்—புடைவை.
துகைத்தல்—உழக்கல்.
துங்கம்—வெற்றி, பெருமை.
துயர்—துன்பம்.
துரத்தல்—செலுத்தல்.
துவர்—சிவப்பு.
துறை—நீர்த்துறை.
தூமம்—புகை.
தெரியல்—மாலை.
தெறித்தல்—அறுதல், முரிதல்.
தேசிகன்—ஆசாரியன், குரு.
தேம்—இனிமை.
தேர்தல்—ஆராய்தல்.
தேன்—வண்டு.
தொகை—கூட்டம்.
தொடுதல்—தோண்டுதல்.
தொடையல்—மாலை.
தொன்மை—பழமை.
தோகை—மயில்.
நத்தம்—இரா.
நயனம்—கண்.
நராதிபர்—அரசர்.
நாகம்—காரியம்.
நாட்டம்—கண்.
நாட்போனகம்—புத்தமுது.
நாணி—வில் நாண்.
நிதியம்—பொருள், திரவியம்.
நிமித்தம்—சகுனம்.
நிருதன்—ராக்ஷசன்.
நிருபதி—அரசன்.

நிருபர்—அரசர்.
நிறை—காப்பனகாத்துக் கடிவன கடிந்து ஒழுகுமொழுக்கம்.
நீத்தம்—வெள்ளம்.
நீலி—துர்க்கை.
நுகர்தல்—உண்ணல்.
நுதல்—நெற்றி.
நுவலுதல்—சொல்லல்.
நெகுதல்—இளகுதல்; பற்றுவிடுதல்.
நெறி—வழி.
நேசம்—அன்பு.
நொய்து—விரைவு.
பகடு—யானை.
பகர்தல்—(1) சொல்லல், (2) விற்றல்.
பகழி—அம்பு.
பகிர்தல்—பங்கிடுதல்.
பங்கம்—பழுது, குற்றம்.
பங்கயம்—தாமரை.
பணி—பாம்பு.
பணை—பெருத்தல்.
பண்ணுறுத்தல்—பக்குவப்படுத்தல்.
பதன்—செவ்வி.
பம்பல்—மிகுதல்.
பயிற்றுதல்—செய்தல்.
பரவுதல்—துதித்தல்.
பரிசு—தன்மை, விதம்.
பரிவு—அன்பு.
பல்லியம்—வாத்தியம்.
பழனம்—வயல்.
பள்ளி—கோயில்.
பவர்—கொடி.
பறித்தல்—பிடுங்கல்.
பனுவல்—நூல்.
பாங்கு—பக்கம், நட்பு.
பாஞ்சாலர்—பாஞ்சாலநாட்டார்.
பார்த்தன்—பிருதை குமாரன், அருச்சுனன்.
பார்வை—கண்.
பால்—பகுதி.
பாவம்—காதல்.
பிணி—நோய்.
பித்து—மயக்கம்.
பிற்றை—பின்றை, பின்.
பீலி—மயிலிறகு.
பீழை—துன்பம்.
புகலல்—சொல்லல்.
புடம் — புடபாகம், மருந்துசெய்யும் வகைகளிலொன்று.
புண்டரம்—நெற்றிக்குறி.
புரிசை—மதில்.
புலர்தல்—காய்தல், விடிதல்.
புலன்—பொறியுணர்வு.
புல்லல்—தழுவல்.
புவனி—பூமி.
புழுக்கல்—சோறு.
புழை—துளை.
புள்—பறவை.
புனல்—நீர்.
பூகதன்—பூமியையடைந்தவன் (கதன்—அடைந்தவன்.)
பூசுரன்—பிராமணன்.
பூட்கை—யானை.
பூண்—ஆபரணம்.
பூரணம்—நிறைவு.
பூவை—நாகணவாய்ப்புள்.
பெண்மை—பெண்தன்மை.
பெருந்தகை — பெருமையுடையவன்.
பேது — தடுமாற்றம், மதிமடக்கம்.
பேதுறல்—மயங்கல்.
பேழை—பெட்டி.
பை—பாம்பின் படம்.
பொடித்தல்—மயிர் சிலிர்த்தல்.
பொதி—கட்டு, முறுக்கு.
பொதுவர்—இடையர்.

பொறி—புள்ளி.
பொற்பு—அழகு.
போனகம்—சோறு.
போழ்—பிளவு.
போற்றல்—துதித்தல்.
மகிதலம்—பூமி.
மகிபர்—அரசர்.
மகுடம்—முடி.
மங்கலம்—சோபனம்.
மங்குல்—(1) ஆகாயம், (2) மேகம்.
மஞ்சனம்—முழுகுதல்.
மஞ்சம்—கட்டில்.
மடங்கல்—அடங்கல்.
மண்டலம்—கூட்டம்.
மண்டுதல்—நெருங்குதல்.
மது—கள்.
மதுகை—வலி, வெற்றி.
மத்தகம்—தலை.
மயிர்பொடித்தல்—மயிர்சிலிர்த்தல்.
மரன்—மரம் (போலி).
மரபு—முறை, குலம்.
மருப்பு—கொம்பு.
மருள்—மயக்கம்.
மருவுதல்—நெருங்கல், முட்டல்.
மலைதல்—பொருதல்.
மல்லல்—வலி.
மழை—முகில்.
மறவோர்—கொலைஞர்.
மறுகு—வீதி.
மறை—வேதம்.
மன்மரபு—அரசகுலம்.
மன்பதை—மக்கட் பரப்பு.
மன்றல்—மணம், வாசனை.
மாகதன்—மகதநாட்டரசன்.
மா—வண்டு, விலங்கு, குதிரை.
மாக்கள்—(1) விலங்குகள், (2) மக்கள்.
மாசு—குற்றம்.
மாயம்—பொய்.
மாயவன்—திருமால்.
மாயை—கபடம்.
மால்—மயக்கம்.
மாழ்கல் — மயங்கல், மனம்வருந்தல், [அழிதல்.
மாவதம்—பெருங்கொலை, மா—பெரு[மை.
மாற்றம்—சொல், வார்த்தை.
மாற்று—பொன்னின் மாற்று.
மிசை—மேல்.
மிளிர்தல்—விளங்குதல்.
மினல்—மின்னல் (இடைக்குறை).
மீகாமன்—மாலுமி.
முகடு—உச்சி.
முகமன்—உபசாரவார்த்தை.
முகில்—மேகம்.
முகில் ஊர்தி } — இந்திரன்.
முகில்வாகனன். }
முகிழ்த்தல்—அரும்பல்.
முகுந்தன்—விஷ்ணு.
முடங்கல்—வளைதல்.
முடுகு—முடைநாற்றம்.
முண்டிதம்—மொட்டை.
முயங்குதல்—தழுவுதல், பொருந்துதல்.
முருந்து—இறகின் அடிமுள்.
முளரி—தாமரை.
முனிதல்—வெறுத்தல், கோபித்தல்.
மூங்கை—ஊமை.
மெய்—உடல், உண்மை.
மேரு—மேருமலை.
மேவலர்—பகைவர்.
மை—(1) கருமை, (2) குற்றம்.
மைந்தர்—ஆண்மக்கள், பிள்ளைகள்.
மொக்குள்—அரும்பு.
மொத்துதல்—அடித்தல்.
மொய்த்தல்—நெருங்குதல்.
மொய்ம்பு—வலிமை.
மௌலி—கிரீடம்.

யாண்டு—ஆண்டு, வருஷம்.

யாய்—ஆய், தாய்.

யுகம்—இரட்டை.

வகிர்—துண்டு, பிளவு.

வங்கம்—(1) ஈயம், (2) வெள்ளி.

வஞ்சினம்—சபதம்.

வடு—குற்றம்.

வண்மை—கொடை.

வதம்—கொலை.

வதுவை—கல்யாணம்.

வம்பு—மணம், வாசனை.

வயங்குதல்—பிரகாசித்தல்.

வரம்பு—எல்லை.

வராகி—வராகபுடம்; வராகம்—பன்றி.

வரி—இரேகை, பாட்டு.

வரித்தல் — (1) தெரிவுசெய்தல், (2) [விரும்புதல்.

வரை—மலை, வரி, எல்லை.

வலம்புரி—வலமாகப்புரிவது, நந்தியா [வர்த்தம்.

வல்லி—கொடி.

வல்லியம்—புலி.

வல்லை—சீக்கிரம்.

வழுதி—பாண்டியன்.

வளவன்—சோழன்.

வளாகம்—இடம்.

வாகை—வாகைமாலை.

வாணன்—வாழ்+நன், வாழ்பவன்.

வாதி—இரசவாதி.

வாமம்—மாறுபாடு, இடம்.

வாரணம்—பாதுகாப்பு.

வாவி—குளம்.

வாவுதல்—பாய்தல், ஓடல்.

வாள்—ஒளி.

வான்—ஆகாயம்.

வான்மொழி — ஆகாயவாணி, அசரீரி [வாக்கு.

விசி—கட்டு, விசித்தல்—கட்டல்.

விஞ்சை—வித்தை.

விஞ்சைவேந்தன் — வித்தியாதர அர [சன்.

விடாய்—தாகம், இளைப்பு.

விதானம்—மேற்கட்டி.

விதித்தல்—ஏவல்.

விதிர்விதிர்ப்பு—நடுநடுக்கம்.

வித்தகம்—சமர்த்து, வன்மை.

விம்மல்—(1) ஒலித்தல், (2) மிகுதல்.

வில்வேதம்—தனுர்வேதம்.

வில்லின்மார்பு — வில்லின் முக்காற் [பங்கு.

வில்லியர்—வில்வீரர்.

விளித்தல்—அழைத்தல்.

விளைதல்—உண்டாதல், தோன்றல்.

வினை—(1) கர்மம், (2) யுத்தம்.

வின்மை—வில்வன்மை.

வீக்குதல்—கட்டுதல், வலித்தல்.

வீடல்—விடுதல், நீங்கல்.

வீதல்—இறத்தல்.

வெஃகல்—விரும்பல்

வெதும்பல்—சூட்டினால் நெகிழ்தல்.

வெறி—வாசனை.

வெற்பு—மலை

வேங்கை—புலி.

வேட்டல்—மணஞ்செய்தல்.

வேத்தவை — இராஜசபை (வேந்து+ [அவை.)

வேத்திரம்—பிரம்பு.

வேலை—சமயம்.

வேள்வி—யாகம்.

வேற்றுமை—வேறுபாடு.

வைகல்—நாள்.

வைகுதல்—தங்குதல்.

C. [illegible] PRESS, UNIVERSITY PRINTERS, MADRAS—1917.